03rd December 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 08 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com




# இஸ்ரேலுடனான உறவினை தற்காலிகமாக முறிக்கவும்

## பலஸ்தீன் சால்வை அணிந்து டிலான் பெரேரா வேண்டுகோள்



பலஸ்தீன் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் யுத்தத்தை நிறுத்தும் வரை இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவினை தற்காலிகமாக முறித்துக் கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

சனியன்று பாராளுமன்றத்தில் பலஸ்தீனுக்கு 02ம் பக்கம்பார்க்க...


இந்த அடக்கு முறைக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும்

# சீறும் மிட்சாங்

வங்காள விரிகுடாவின் தென்மேற்கு கடல் பிராந்தியத்திற்கு மேலாக யாழ்ப்பாணத்திலிருந்து வடகிழக்காக சுமார் 330 km தொலைவில் சக்திமிக்க தாழ் அமுக்கம் நிலைகொண்டுள்ளது. இது விருத்தியடைந்து அடுத்துவரும் 12 மணித்தியாலங்களில் சூறாவளியாக

02ம் பக்கம்பார்க்க...

# அஷ்ரப் பேருரை நிகழ்த்தும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா





முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எம்.எச். எம்.அஷ்ரப்பின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்வொன்று எதிர்வரும் 02ம் பக்கம்பார்க்க...



# இராணுவ ரீதியாக இஸ்ரேலை தோற்கடிப்போம்

## யுத்த நிறுத்தத்துக்கும் இணங்கோம்

ஹமாஸ் அதிரடிக் கருத்து

(சிறப்பு நிருபர் எம் என் முஹம்மத்)

காஸா போர் 02ம் பக்கம்பார்க்க...

# இலங்கைக்கு இரு வாரங்களுக்குள் நாணய நிதியத்தின் கடன்

## 330 டொலர் தர இணக்கம்

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரு வாரங்களுக்குள் 02ம் பக்கம்பார்க்க...

# பலஸ்தீனுக்கு தீர்வு வரும் வரை சால்வையை அணிவேன்

## பாராளுமன்றில் ரவூப் ஹக்கீம்



பலஸ்தீனத்தில் இஸ்ரேல் மேற்கொள்ளும் பயங்கரமான படுகொலைகளை சர்வதேச சமூகத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை என 02ம் பக்கம்பார்க்க...

# சுனாமி வீடுகளை பகிர்ந்தளிக்க நடைமுறையொன்றை பெற்றுத் தரவும்

## ஜனாதிபதி செயலாளர் சட்டமா அதிபரிடம் கோரிக்கை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சுனாமி அனர்த்தம் காரணமாக திகாமடுல்ல 02ம் பக்கம்பார்க்க...



# பலஸ்தீன் பிரச்சினைக்கு நீடித்த தீர்வு காணுங்கள்

## இஸ்ரேலுக்கு மோடி அழைப்பு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

பாலஸ்தீன பிரச்சினைக்கு நீடித்த தீர்வு காண இஸ்ரேல் 03ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை

மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-

ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இஸ்ரேல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு தெரிவிக்கும் சால்வையை அணிந்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் ஆகியோரும் பலஸ்தீனுக்கு ஆதரவான சால்வை அணிந்து பலஸ்தீனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

பா.உ. டிலான் பெரேரா மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது, சால்வை அணிந்திருக்கும் போது பலரும் என்னிடம் ஏன் இதனை அணிகிறீர்கள் என்று கேட்டார்கள். பலஸ்தீனிலே இன்று ஆறு நிமிடத்துக்கு ஒரு பிள்ளை கொல்லப்படுகின்றது. புத்து நிமிடத்து ஒரு பெண் வீதம் கொல்லப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்படுகிறார்கள். பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவித்தே நாம் இந்த சால்வையை அணிகின்றோம். ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்படுகின்றார்கள். இந்தப் பின்னணியில் நாம் ஏன் எமது தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்ப வேண்டும். இஸ்ரேலின் இந்த அடக்குமுறைக்கு எதிராக நாம் எழுந்து நிற்கவேண்டும்.

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருக்கும்போது இஸ்ரேலுடனான இராஜதந்திர தொடர்புகளை நிறுத்திக் கொண்டார். இந்த விடயத்தில் பணத்தை விட மனிதாபிமானம் தான் முக்கியமாகக் கருதப்படவேண்டும். முழு பாராளுமன்றமும் பலஸ்தீனுக்கு ஆதரவாக இருக்கின்றது. இது தொடர்பான பிரேரனையொன்று கூட சில தினங்களுக்கு முன்னர் பாராளுன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனவே பலஸ்தீன் யுத்தம் நிறுத்தப்படும் வரை இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவை தற்காலிகமாக நிறுத்தவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும்

இந்த விடயம் உணர்த்தும் மிக முக்கியமான விடயம் என்னவென்றால், நான்கு நாட்கள் முடிவடைவதற்குள் அல்லது நான்கு நாட்கள் முடிவடைந்த பின்பு முழு வீச்சிலும் மீளவும் இரு தரப்பினருக்கிடையில் தாக்குதல் ஆரம்பிக்கும் என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

## அஷ்ரப்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

12 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலியின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அஷ்ரப் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசின் முக்கிய தலைவர்கள் பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

## இலங்கைக்கு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளதுடன், உலக வங்கியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக, மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இம்மாதத்தில் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

கடன் மீள் செலுத்தலுக்கான நிவாரண காலத்தை இலங்கைக்கு வழங்கியுள்ள சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் கடனுக்கான வட்டி தொகையில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டது.

இது குறித்து நிதி அமைச்சின் பேச்சாளர் மேலும் கூறுகையில், தேசிய மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இம்மாதத்தில் 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளது. சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு கடனை மீள் செலுத்த நிவாரண காலத்தை வழங்கவும் இணங்கியுள்ளனர்.

மேலும், கடன் மற்றும் வட்டியை மீள்செலுத்த நிவாரண காலமும் கடன் வட்டியில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளது. மறுபுறம் உலக வங்கியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கைக்கு இம்மாதத்தில் கிடைக்கப்பெறும்.

இதன் பிரகாரம், இந்த டிசெம்பர் மாதத்தில் 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (257 பில்லியன் ரூபா) இலங்கைக்கு கிடைக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்த நிதிகளை பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க மற்றும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று கூறினார்.

## சுனாமி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று வீடுகளை வழங்குவதற்காக சவூதி அரேபியாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பகிர்ந்தளிப்பதற்கு உயர் நீதிமன்றத்தினூடாக வழிமுறையொன்றைப் பெற்றுத் தருமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க சட்டமாஅதிபர் சஞ்சய ராஜரத்தினத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் ஆஸாத் சாலியின ஏற்பாட்டில் முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது விடுத்த கோரிக்கையில், நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தின் நிலைமை பற்றி சுட்டிக் காட்டியிருந்தனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட சவூதி அரேபிய அரசின் உதவியுடன் 50 ஏக்கமனர் காணியில் 500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

இந்த வீடுகளை முஸ்லிம்களுக்கு மட்டும் பகிர்ந்தளிப்பதனால் அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேதானந்த எல்லாவலை தேரர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பின்படி அடிப்படை மனித உரிமை மீறாது வீடுகள் பகிர்தளிக்கப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

2008 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இந்த வீடுகளைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்திற்கு உதவி வழங்கிய சவூதி அரேபியா தொடர்ந்து ராஜ தந்திரரீதியாக இந்த வீட்டுத்திட்டத்தைப் பற்றி அரசின் அவதானத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

எனவே, இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் அவதானத்திற்குக் கொண்டு வந்து, இந்த வீடுகளை பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறையொன்றைப் பெற்றுத் தருமாறு ஜனாதிபதியின் செயலாளர் சட்டமா அதிபரிடம் கேட்டுள்ளார்.

## சீரும்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வலுவடையக்கூடும். இது இலங்கையின் வட கரையை அண்மித்ததாக நாட்டை விட்டு அப்பால் நகர்ந்து செல்கின்றது. இது சூறாவளியாக மாறி வடக்கு நோக்கி நகர்வதுடன் நாளைமறுதினமளவில் தென் ஆந்திரா கரையை ஊடறுத்து செல்லக்கூடும்.

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 60 - 70 மஅ வேகத்தில் அடிக்கடி காற்று வீசக்கூடும். இதேவேளை இக் கடல் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் அபாயகரமானதாகவும் காணப்படும்.

ஆகையினால் மீனவர்களும் கடல் சார் ஊழியர்களும் மறு அறிவித்தல் கிடைக்கும் வரையில் குறிப்பிட்ட கடல் பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

காலி தொடக்கம் மாத்தறை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களுக்கு செல்லும் மீனவர்களும் கடல் சார் ஊழியர்களும் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வானம் முகில் சூழ்ந்து காணப்படும்.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மாகாணத்திலும் அத்துடன் கண்டி மற்றும் நுவரேலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்தின் பல இடங்களிலும் அத்துடன் அம்பாரை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

மேல் மாகாணத்திலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் திரிகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 - 50 மஅ வேகத்தில் அடிக்கடி பலத்த காற்று வீசக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பலஸ்தீனுக்கு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் விசனம் தெரிவித்தார்.

பலஸ்தீன சால்வையை அணிந்து கொண்டு நேற்று (2)அங்கு அவர் மேலும் கூறியதாவது,

நீதி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்னர், எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் சில நிமிடங்கள் பலஸ்தீன மக்களுடனான எங்களது இந்த உயர் சபையின் ஒருமைப்பாட்டை பிரகடனப்படுத்துவதற்கு ஓர் அடையாளமாக அந்த நாட்டின் சால்வையை அணிந்து நான் இங்கு உரையாற்றுகின்றேன் .இந்த பலஸ்தீனப் பிரச்சினைக்கு ஓர் உரிய தீர்வை அறியும் வரை இங்கு இந்த சால்வையை அணிந்திருக்கத் தீர்மானித்திருக்கின்றேன்.

அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் தொடுத்த தாக்குதலுக்கு பயங்கரமான பழிவாங்கலாக இஸ்ரேல் மிலேச்சத்தனமாக அந்த அப்பாவி பலஸ்தீன மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் தாக்குதல்களை நாங்கள் வன்மையாக கண்டித்து வருகின்றோம்.

157 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை யுத்தத்தை நிறுத்துமாறு கோரி ஐ.நா செயலாளர் நாயகத்துக்கு அனுப்புவதற்காக நாங்கள் அதன் அலுவலகத்துக்கு கையளிக்கச் சென்றபோது ,அங்கும் கூட இஸ்ரேலர்களின் மூர்க்கத்தனமான தாக்குதல்களில் கொல்லப்பட்ட 150 பேருக்கு அதிகமான அதன் பணியாளர்களை நினைவு கூர்ந்து அரைக்கம்பத்தில் ஐ.நா.வுடைய கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

தற்காலிகமாக சில நாட்கள் இருந்த யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து நேற்றிலிருந்து மீண்டும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தின் பல பிரதேசங்கள் மீது இஸ்ரேல் தாறுமாறாக குண்டு தாக்குதல்களை நடத்தி நூற்றுக் கணக்கானவர்களை கொன்று குவித்து வருகின்றது.

உலகில் மோதல்கள் இடம் பெற்ற நாடுகளில் ஐ.நா.

பணியாளர்கள் அதிகமாக கொல்லப்பட்ட சம்பவங்கள் பலஸ்தீனத்தில் தான் நடந்திருப்பதாக அதனுடைய செயலாளர் நாயகம். அறிவித்திருக்கிறார்.

உலகின் மிகப்பெரிய திறந்தவெளி சிறைச்சாலையாக மாறி இருக்கின்ற பலஸ்தீன பிரதேசங்களில் உணவு, நீர் மற்றும் மருத்துவ உதவிகள் இன்றி பல்லாயிரக்கணக்கான மக்களை இஸ்ரேல் படையினர் கொன்று குவித்து வருகின்றனர்.

ருவண்டா,பொஸ்னியா போன்ற நாடுகளில் நடந்த இனப்படுகொலைகளைத் தொடர்ந்து இனி அதனை அனுமதிக்க போவதில்லை என்று மேற்குலகத் தலைவர்கள் கூறியவை இன்று பொய்யாகிப் போயிருக்கின்றன. அது அர்த்தமற்றதாக எங்களுக்கு இப்பொழுது தான் புரிகின்றது. அந்த அளவிலான ஒரு "மறதி நோய்" மேற்கு நாடுகளை இன்று பீடித்திருக்கின்றது.

அமெரிக்க தூதர் ஜூலி சாங் ட்விட்டர் (டு)பதிவு ஒன்றில் வடக்கில் இராணுவம் மக்களை கைது செய்வதை பற்றி கூறியிருக்கிறார். அதேபோன்று அ பலஸ்தீனத்தில் அப்பாவி குழந்தைகளும் பெண்களும் நிரபராதிகளும் கொல்லப்படுவதையும் அவர் சமமாக பார்த்திருக்க வேண்டும்.

உலகில் மோதல்களிடம் பெற்ற பகுதிகளில் ஐ.நா. பணியாளர்கள் அதிகமாக கொல்லப்பட்ட சம்பவங்கள் பலஸ்தீனத்தில் தான் நடந்திருப்பதாக அதனுடைய செயலாளர் நாயகம். அறிவித்திருக்கிறார் .

சர்வதேச சமூகத்தினால் பலஸ்தீனத்தில் பயங்கரமான படுகொலைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இது இனப்படுகொலை இல்லையென்றால்,எது இனப்படுகொலை?

குழந்தைகளும் சிறுவர்களும் பெண்களும் வயது முதிர்ந்தவர்களும் என யுத்தத்தோடு பலஸ்தீன மோதலோடு எந்த விதத்திலும் சம்பந்தப்படாத அப்பாவி மக்கள் கொல்லப்படும் சிறைபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். பலஸ்தீன பிரதேசங்களில் நிறைய அப்பாவிகளை இஸ்ரேல் படையினர் சிறை பிடித்து வருவதோடு, யுத்த நிறுத்த வேளையிலே கைதிகள் பரிமாறி பரிமாறிக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து பலஸ்தீனப் பிரதேசத்துக்கு வருகை தந்த விடுவிக்கப்பட்ட கைதிகளை வரவேற்க கூடாது ,அவர்களது வருகையை கொண்டாடக்கூடாது என்று வீடு வீடாகச் சென்று இஸ்ரவேல் படையினர் அச்சுறுத்தி வருவது வருவதையும் காண்கிறோம். இவ்வாறான சம்பவங்கள் அங்கு இடம் பெறுகின்றன."வாழ்க,பலஸ்தீனம்" என்றார்.



## இராணுவ...

**(முன் பக்கத் தொடரச்சி)**

மிகவும் இக்கட்டான கட்டத்தை அடைந்துள்ளது. கட்டாரில் நடைபெற்ற போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை முற்றிலுமாக முடிவடைந்துள்ளது. இஸ்ரேல் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு கவனமெடுப்பது தவிர மக்களது பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு தயார் இல்லை என்பதால் ஹமாஸ் பேச்சுவார்த்தையிலிருந்து பின்வாங்கியுள்ளது. அத்துடன் முழுமையாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துமாறு இஸ்ரேலை ஹமாஸ் கடுமையாக வலியுறுத்தியுள்ளது.

இதேநேரம் எகிப்தும், பிரான்சும் எப்படியாவது யுத்த நிறுத்ததை கொண்டுவரவேண்டுமென்பதில் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. காஸாவில் காணப்படக்கூடிய இராணுவ நிலை நீடிக்குமாக இருந்தால் மிகப் பெரிய பிராந்திய யுத்தமாக மாறுமென பிரான்ஸ் அஞ்சுவதாக பிரான்ஸ் ஜனாதிபதி மெகரோன் தெரிவித்துள்ளதோடு, இரு தரப்பினருக்குமிடையில் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி கட்டார் நோக்கி பயணமாகியுள்ளார்.

இதேவேளை யுத்த நிறுத்தமானது ஆக்கிரமிப்பு இல்லாத போது மாத்திரமே அமுல்லில் இருக்குமென ஹமாஸ் கூயிருப்பதானது சர்வதேச கவனத்தை ஈடுர்த்துள்ளது.

கடந்த 48 மணித்தியாலத்தில் இடம்பெற்ற போரில் இஸ்ரேலுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலின் கூடாரமொன்றுக்கு குண்டு வைத்ததில் அதில் இருந்த 60 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், மூன்று இஸ்ரேலிய வானூர்திகள் இராணுவ வீரர்களின் உடல்களை எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்ததாக அல்கஸ்ஸ ாம் செய்தி வெளியிட்டுள்ளது. ஹமாஸ ின் சுரங்கப் பாதைக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவ குழு மீது ஹமாஸ் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் அதில் சிக்குண்டு இஸ்ரேலிய வீரர்கள் அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை வீடொன்றுக்குள் பதுங்கியிருந்த இஸ்ரேலிய வீரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதில் பல இஸ்ரேலிய விஷேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டுள்னர். இஸ்ரேல் தலைநகர் தெல்லவே உட்பட பல்வேறு பகுதிகளில் ஹமாஸ் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹமாஸின் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாத இஸ்ரேலிய படைகள், பொதுமக்கள் இருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் கடந்த 48 மணித்தியாலத்திநற்குள் 800 க்கும் அதிகமான பொதுமக்கள் உயிரழழந்துள்ளனர்.

இதேநேரம் ஈராக்கிலும், சிரியாவிலும் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீளவும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. அமெரிக்காவிலிருந்து ஆயுதங்களை ஏற்றி வந்த விமானம் தரையிறங்கிய ஐந்து நிமிடத்துக்குள் அந்தத் தளம் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. லெபனாலிருந்து ஹிஸ்புல்லாப் படை தொடராக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. இஸ்ரேல் முதற் தடவையாக லெபனானில் ஆழச் சென்று விமானத் தாக்குதல் நடத்தியுள்ளது. செங்கடல் பகுதியில் ஹூத்தி படையினர் கப்பல்களை தடுக்க முயற்சித்து வருவதாகவும், அவ்வாறான முயற்சியை தான் முறியடித்துள்ளதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 48 மணித்தியாலயப் போரை எடுத்துக் கொண்டால் மிகப் பெரிய பிராந்திய போராக இந்தப் போர் நகரக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்று.

சிரியா, லெபனான், காஸா மற்றும் பாலைவனப் பகுதிகளிலிருந்தும் இஸ்ரேல் மீது ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் உனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துமாறு மேலைத்தேய நாடுகளிடம் இஸ்ரேல் கோரிக்கை விடுத்திருந்தாலும், இராணுவ ரீதியாக இஸ்ரேலை தோற்கடிப்பதில் ஹமாஸ் உறுதியாக இருப்பதாக அங்கிருந்து

## பலஸ்தீன்...

**(முன் பக்கத் தொடரச்சி)**

முன்வர வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் ஐசக் ஹெர்சாக்கிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற்று வரும் ஐநாவின் பருவநிலை உச்சி மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, மாநாட்டில் கலந்து கொண்ட ஐநா பொதுச் செயலாளர் ஆண்டனியோ குத்ரஸ், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான், இஸ்ரேல் அதிபர்ஐசக் ஹெர்சாக் உள்பட உலகத் தலைவர்கள் பலரை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசினார்.

ஐசக் ஹெர்சாக் உடனான சந்திப்பின்போது, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான மோதல் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். அக்டோபர் 7 அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். மேலும், பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டதைப் பிரதமர் வரவேற்றார். காசாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் விரைவான மற்றும் நிலையான தீர்வு காண இந்தியா ஆதரவு வழங்கும் என்று கூறினார். இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின் வெற்றிக்காக இஸ்ரேல் அதிபர் ஹெர்சாக், பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்தார். மேலும், இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் தொடங்கப்படுவதற்கும் அவர் வரவேற்பு தெரிவித்தார்.

ஐநா பொதுச் செயலாளர் ஆண்டனியோ குத்ரஸ் உடனான சந்திப்பின்போது, இந்தியாவின் கீழ் பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளில் இந்தியாவின் முயற்சிகளை ஐநா பொதுச் செயலாளர் ஆண்டனியோ கட்டரஸ் பாராட்டினார். பிரதமரின் பசுமைக் கடன் திட்டத்தை அவர் வரவேற்றார். இந்தியாவின் தலைமைத்துவப் பணிகளை 2024-ஆம் ஆண்டின் ஐநா



ஜி20 தலைமைத்துவத்தின்போது ஐநா பொதுச்செயலாளர் வழங்கிய ஆதரவுக்காக அவருக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். பருவநிலை இலக்குகளை அடைவதில் இந்தியாவின் முன்முயற்சிகள் மற்றும் முன்னேற்றத்தை பிரதமர் எடுத்துரைத்தார். பருவநிலை நடவடிக்கைகள், பருவநிலை நிதி, தொழில்நுட்பம் போன்றவை, பலதரப்பு நிர்வாகம் மற்றும் நிதி சீர்திருத்தங்கள் தொடர்பாக வளரும் நாடுகளின் முன்னுரிமைகள் மற்றும் கவலைகள் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

நிலையான வளர்ச்சி, பருவநிலை நடவடிக்கைகள், பல்நோக்கு மேம்பாட்டு வங்கி சீர்திருத்தங்கள் மற்றும் ஜி-20 தலைமைத்துவத்தின் உச்சி மாநாட்டில் முன்னெடுத்துச் செல்வதற்கும் இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் ஆண்டனியோ குத்ரஸ் பிரதமரிடம் உறுதியளித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ஊழ்ரீ 28 உச்சி மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி, ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சந்தித்தார். அப்போது, ஊழ்ரீ 28 உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக ஷேக் முகமது பின் சயீதுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். ஊழ்ரீ 28 இல் பசுமை காலநிலை திட்டம் குறித்த உயர்மட்ட நிகழ்வை இணைந்து ஏற்பாடு செய்ததற்காக அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யானுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகாரிகளின் பயங்கரவாதம்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகாரிகளின் பயங்கரவாதம் உருவெடுத்திருக்கின்றது அது அங்கு மிகவும் மோசமாக இருக்கின்றது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் கூறினார்.

பிரதமரின் கீழ் உள்ள பொது நிர்வாக, உள்நாட்டலுவலகள்இமாகாண சபைகள்இஉள்ளூராட்சி சபைகள் அமைச்சின் வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதம் செவ்வாய்கிழமை(28)நடைபெற்றபோது சபையில் உரையாற்றுகையிலேயே இதனைச் சொன்னார்.

அங்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அமைச்சுக்கு பொறுப்பான பிரதமர் தினேஷ் குணவர்தணவும்இ ராஜாங்க அமைச்சர்களான ஜனக்க வக்கும்புற, அசோக பிரியந்த ஆகியோரும் சிறப்பாக செயல்படுகிறார்கள் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

இந்த நாட்டின் பொது நிருவாகத்தில் முதுகெலும்பாகக் கருதப்படுகின்ற கிராம அலுவலர்கள் 14இ000 பேர் ஆற்றுகின்ற பணி மகத்தானது. அவர்களது கொடுப்பனவுகள்இ அலுவலக தேவைகள் போன்றவை உரிய முறையில் நிறைவு செய்யப்பட வேண்டும்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களில் சமயா சமய ஊழியர்கள் 8000 பேர்பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்

அலி சாஹிர்மௌலானா எம்.பி இன்று (28) இங்கு உரையாற்றவிருந்தார். அவசர காரணத்துக்காக அவர் மட்டக்களப்புக்குச் சென்றிருக்கின்றார். உள்நாட்டு அலுவல்கள் பொது நிர்வாக அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு அவர் சமர்ப்பித்திருக்கும் முன்மொழிவுகளைப் பற்றி இங்கு குறிப்பிட்டு பேசும் படி அவர் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

சட்ட ரீதியாக இஉத்தியோபூர்வமாக கிராம அலுவலர் பிரிவுகள் வர்த்தமானியில் வெளியிடப்படாத இ சில பிரிவுகளை உள்ளடக்காத பிரதேச செயலகமாக தற்போது இருக்கக் கூடிய கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலக பிரிவுக்கு தாமதமின்றி 206இ206(ட)இ207(னு)இ 206(யு)இ 206(ஊ)206இ208(யு) 208(னு) 210(ஊ)211(ட) 211(ர்) 211(பு-2) என்கின்ற கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அது அறிவிக்க பட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுக்கின்றார்.

முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் இங்கு இருக்கிறார். இது அவரும் அறிந்த விடயம். சபைஒத்தி வைப்பு வேளை பிரேரணையொன்றின் போது இந்த விடயத்தைச் சுட்டி காட்டி அவர் எங்களுக்கு பதில் வழங்கியிருந்தார். புதிய குழுவொன்று அமைக்க பட்டிருக்கின்றது. புதிய குழுவின் பரிந்துரையையும் இதன் போது கவனத்தில் கொள்வதாகச் சொன்னார்.

இந்த அமைச்சுக்குப் பொறுப்பாக தற்போதைய பிரதமர் அவர்கள் இருப்பது போல இதற்கு முன்னரும் பிரதமர் ஒருவர் இந்த அமைச்சைப் பொறுப்பெடுத்திருந்தார். அவர் ரத்தின சிரி விக்கிரமநாயக்க . அவருடைய காலப்பகுதியில் பனம்பலம எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது. அதன் சிபாரிசுக்கு அமைவாகஇ குழுவின் அறிக்கையின்படி பல இடங்களில் பிரதேச செயலக பிரிகளை உருவாக்கினார்கள்.அவை இரத்மலானைஇ இங்கிரியஇவலஸ்முல்ல மற்றும் நான் இங்கு குறிப்பிடுகின்ற கோறலைபற்று மத்தி என்கின்ற பிரதேச செயலக பிரிவுகளாகும். கோறலைபற்று தெற்குஇசாய்ந்தமருது, நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுகள். புதிதாக உருவாக்கப்பட்டன. கோறலைப் பற்று மத்திக்கு சொந்தமான பிரதேச செயலக பிரிவு தொடர்பாகத்தான் பிரச்சினை இருக்கின்றது. கோறலைபற்று தெற்கு பெரும்பான்மை தமிழ் மக்கள் வாழும் பிரிவு. அந்த பிரிவு வர்த்தமானியூடாக சட்ட ரீதியானதாக ஆக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால்இ முஸ்லிம் பெரும்பான்மை இருக்க கூடிய கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலக பிரிவு அந்த சந்தர்ப்பத்தில் சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்ட போதிலும்இ அந்த பிரதேச செயலக பிரிவுக்குரிய கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிடாமல் வைத்துக் கொண்டு 20 வருடங்களாக முறையற்ற வகையில் நிர்வகிக்கின்ற இடமாகத்தான் இதை காட்ட முயற்சிக்கின்றார்கள்.

ஆகவே இநான் வேண்டுகோளொன்றை விடுக்க விரும்புகின்றேன். தேவையற்ற வகையில் நான் அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற ஒருவன் அல்ல. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட செயலகத்தில் இருக்கக்.கூடிய உயர் அதிகாரிகளுக்கு இடையில் பலர் இடமாற்றம் பெற்று இருக்கின்றனர்.அங்கு இருக்கின்ற உயர் அதிகாரிகள் பலரும் மாறுதல் பெற்று இருக்கின்றார்கள். மாவட்ட அரசாங்க அதிபர்களும் மாற்றப்பட்டு இருக்கின்றார்கள்.இருந தஇஇருக்கின்ற அதிகாரிகளின் செல்வாக்கு அங்கு அதிகமாக இருப்பதை நான் உணர்கின்றேன்.

உண்மையில் சொல்ல போனால் இஅதை அதிகாரிகளின் பயங்கரவாதம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. துப்பாக்கி பயங்கரவாதத்திற்கு நாங்கள் முகம் கொடுத்தோம். ஆனால்இ அதிகாரிகளின் பயங்கரவாதம் அங்கு உருவெடுத்திருக்கின்றது.அது அங்கு மோசமாக இருக்கின்றது.

இருபது வருடங்களாக சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட இந்த பிரதேச செயலகப் பிரிவுக்கு சொந்தமான அதன் ஆளுகைப் பிரதேசத்தை நிர்வகிக்க விடாமல் அதற்கு தடை ஏற்படுத்திக் கொண்டிருக்க கூடிய இந்த அதிகாரிகளுக்கு எடுக்க கூடிய நடவடிக்கை என்ன?

எங்களது கட்சியில் இருந்து வெளியேற்றபட்ட நஸீர் அஹமட் அவர்களும் உங்களிடம்(பிரதமர்)இது தொடர்பான விபரங்களை சொல்லியிருப்பார் என நினைக்கின்றேன். அவரும் இது தொடர்பாக நேர்மையுடன் தலையிட்டார். அவரை கட்சியில் இருந்து துரத்தியது வேறு காரணத்திற்காக. அது வேறு விடயம். ஆனால்இ இது தொடர்பாக அவரும் முன்வந்து விடயங்களைச் சுட்டி காட்டியிருக்கிறார் என்று நம்புகிறேன்.

பிரதமர் அவர்களேஇ இது அதிகாரிகளுடைய பயங்கரவாதம். அதிகாரிகள் இனவாத அடிப்படையில் செயல்படுகிறார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால்இ முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்க கூடிய பிரதேசத்திற்கு மாத்திரம் செய்திருக்க கூடிய இந்த பாதகமான செயல் தொடர்பாக நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டும். .வாழைச்சேனைஇ பிறந்துறைச்சேனைஇ மாவடிச்சேனை கிராம அலுவலர் பிரிவுகளில் மீன்பிடித் துறைமுகம் . வைத்தியசாலைஇ பொலிஸ் நிலையம்இ புகையிரதநிலையம் . கால்நடை அலுவலகம் இநீதவான்நீதிமன்றம் விவசாய திணைக்கள அலுவலகம் . வீதி அபிவிருத்தி அதிகாரசபை உப அலுவலகம் முதலான. அரச அலுவலகங்கள் பல இருக்கின்றன.

முழுமையாக சட்ட விரோதமான முறையில் இந்த பிரதேசத்திற்குள் பிழையான வரைபடங்களைத் தயாரித்துக் கொண்டு இவிசேடமாக வாக்காளர் பதிவேடு இஅதை கண்காணித்தல் மற்றும் சனத்தொகை மதிப்பீட்டுப் பணிகள் ஆகிய அனைத்தையும் கோறளைபற்று தெற்கு செயலக உத்தியோகத்தர்கள்தான் செய்ய முயற்சிக்கின்றார்கள். இதை முழுமையாகத் தவறான செயல் என்றுதான் சொல்லவேண்டி இருக்கின்றது. பிரஸ்தாப எல்லை நிர்ணயக் குழு வழங்கிய அந்த சிபாரிசை அல்லது அந்த ஆணையை எங்கள் மக்களுக்கு அனுமதிக்காமல் இருப்பது தவறாகும்.எனவேஇ அதற்கு எதிராகச் செயல்படுகின்ற அதிகாரிகள் மீது குற்றம் சுமத்த வேண்டி இருக்கின்றது.

கோறளைபற்று மேற்கு கிராம அலுவலர்பிரிவும்இ கோறளைபற்று வடக்கு கிராம அலுவலர் பிரிவும் இருக்கின்றன. ரிதீதென்னஇகாரமுனை அதுபோல இன்னுமொரு கிராம அலுவலர் பிரிவை புதிதாக ஏற்படுத்திஇ இந்த கிராம அலுவலர்பிரிவுகளை கோறளைப்பற்று மத்தி என்று சொல்லக்கூடிய பிரதேச செயலக பிரிவுக்கு உள்வாங்குமாறு வழங்கப்பட்ட சிபாரிவு முழுமையாக தவிர்க்கப்பட்டு இஇந்த அதிகாரிகள் முன்னெடுக்கின்ற "பயங்கரவாதம் " தொடர்பாக நாங்கள் அடிக்கடி கதைத்து வருகின்றோம். ஏன் அவர்கள் நியாயமாக நடந்துகொள்ளாமல் இருக்கின்றார்கள்.

இந்த நடவடிக்கையின் மூலம் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் அதற்கு வெளியிலும் செயல்படுகின்ற இந்த அரச அதிகாரிகள் மேலதிகாரிகள் வேண்டுமென்று அங்கு நான் இங்கு குறிப்பிட்ட பிரதேசங்களில் ரிதிதென்ன, ஜெயந்தியாய,காரமுன போன்ற கிராம அலுவலர் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டு, அந்த கிராம அலுவலர் பிரிவுகளை கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தோடு இணைத்திருப்பதான அறிக்கை வெளிவந்த பிறகும் கூட இதுவரை அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.அவ்வாறு வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு தடை விதித்துக்கொண்டு இ அதை நடக்க விடாமல் தடுத்துக்கொண்டு அந்த பிரதேசங்களை கோறளைப்பற்று தெற்கின் ஊடாக நிர்வகிக்க முயற்சிக்கின்ற மற்றும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தினூடாக நிர்வகிக்க முயற்சிக்கின்ற வேளையில்ஒரே கிராம அலுவலர் பிரிவுக்கு கிராம அலுவலர்கள் இருவர் செயல்படுகின்ற ஒரு விசித்திரமான நிலைவரம் அங்கு காணப்படுகின்றது என்பதை நான் உங்களூடாக கௌரவ பிரதமருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இதனுடைய பாரதூரம் என்னவென்றால்இ இன்று தியாகுவெட்டுவான் போன்ற பிரதேசங்களிலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள் இருக்கின்ற கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்குச் சென்று தங்களுடைய அலுவல்களை முடிக்கக்கூடிய நிலையில் மக்கள் இருக்கின்ற போது அவர்கள் முப்பது கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கின்ற வாகரை பிரதேசத்திற்குப் போய் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் தங்களுடைய அலுவல்களை முடிக்க வேண்டிய ஒரு நிர்பந்தத்துக்கு வேண்டுமென்றே இந்த நிர்வாகப் பயங்கரவாதம் இடமளித்து வருகின்றது என்ற குற்றச்சாட்டைத்தான் நாங்கள் முன்வைக்கிறோம்.

இந்த பிழையான நடவடிக்கையின் மூலம் ஏராளமான ஏறத்தாழ இருநூற்று நாற்பது சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலான ஒரு நிலப்பரப்பு இந்த கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகத்தின் கீழ் வர வேண்டியதைத் தடுக்கின்ற நிலைவரம் மிகவும் பாரதூ ரமானது. இதை கவனத்தில் எடுத்து இதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நான் மிக தாழ்மையுடன் வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இப்ப கல்முனை பிரதேச செயலகத்தை தமிழ் பிரதேச செயலகம் இமுஸ்லிம் பிரதேச செயலகம் என்று வைத்துக்கொண்டுஇ அதற்கு ஒரு கணக்காளரை நியமிக்கவில்லை என்ற பாரிய குற்றச்சாட்டை இன்று பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இங்கு சொன்னார். எங்களுடைய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் இங்கு இருக்கின்றார்கள்.

ஆனால் இ இந்த நியமனம் சம்பந்தமாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதை தரம் உயர்த்துகின்ற விவகாரம் சம்பந்தமாக இருக்கின்ற விஷயம் இப்போது நீதிமன்றத்திற்கும் போயிருக்கின்றது.

ஆனால் இதை தீர்ப்பதாக இருந்தால் அங்கு இருக்கின்ற கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும். எழுபது வீதமாக இருக்கின்ற முஸ்லிம்களுக்கு இருபத்தி ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளும் முப்பது சதவீதமாக இருக்கின்ற தமிழர்களுக்கும் இருபத்தி ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளுமாக இந்த கிராம அலுவலர் பிரிவு எல்லைகளைப் பிரிக்கின்ற விவகாரத்திலும் அநீதி நடந்திருக்கின்றது. அதை திருத்துகின்ற விவகாரத்தில்இ அதைப்போன்று ஒரு குழுவை அமைச்சர் நியமித்திருந்தை அறிந்திருந்த முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ கூட அதை செய்வதாக உறுதியளித்திருந்தார்.

வஜிர அபேவர்தன அமைச்சராக இருந்தபோதும் இதை நாங்கள் அன்றும் சொல்லி இருந்தோம். இன்று பிரதமர் இதற்கு பொறுப்பாக இருக்கின்ற இந்த காலகட்டத்தில் இந்த நிர்வாகச் சிக்கல்கள் வேண்டுமென்றே ஒரு விதமான பாரபட்சத்துடன் நடந்து கொண்டததால் ஏற்பட்ட எல்லை பிரிப்பின் காரணமாக நடந்த சிக்கல்கள்தான். எனவே பாரபட்சம் இல்லாத ஓர் எல்லை மீளமைப்பு நடைபெற வேண்டும். அவ்வாறு நடைபெற்ற பிறகுதான் இவற்றை நாங்கள் தீர்க்க முடியும் என்ற விஷயத்தை நான் தெட்டத்தெளிவாக இங்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

அதை தவிர்த்து இதைமுஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்ககள் மீது அல்லது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து நியாயமாக, நேர்மையாக இதற்கு ஒரு சாதாரண தீர்வை பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன்

இதேவேளை இஇங்கு பிரதமரிடம் பணிவான வேண்டுகோளொன்றை விடுக்கின்றேன்.இப்பொழுது பின் போடப்பட்டிருக்கின்ற தேர்தல்களை அவசரமாக நடத்துவதற்கு ஏதாவது செய்யுங்கள் . இதைச் சொல்லும்போதுபிரதமர் எழுந்து எந்த நாளும் சொல்லுகின்ற விஷயம் என்று என்னைத்தான் குற்றம் சொல்லுவார். நான்தான் சீர்திருத்தங்களை சரியாக செய்வதற்கு ஒத்துழைக்கவில்லை என்று சொல்வார். ஆனால்இ உண்மை அதுவல்ல என்று அவருக்கு நன்றாக தெரியும் அவரின் மனசாட்சிக்குத் தெரியும்.

அவர் ஜனாதிபதியுடைய இந்த திருகுதாளங்களுக்கு துணை போகாமல் தயவு செய்து மிக அவசரமாக தேர்தலை நடத்தி இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு வழிகோலுவார் என்ற விடயத்தை முன்வைத்து விடைபெறுகின்றேன் என்றார்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 DECEMBER 03 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பிராந்திய யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்க யுத்த நிறுத்தம் தொடர வேண்டும்

கடந்த ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி ஆரம்பமான இஸ்ரேல் – பலஸ்தீன் மோதல் கட்டாரின் மஸ்தியஸ்தத்தினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. சமாதானத்தை விரும்பும் சகலரும் இந்த யுத்த நிறுத்தத்தை வரவேற்றுள்ளனர். காஸாவில் வாழும் மக்கள் இந்த யுத்த நிறுத்தத்தினை பட்டாசு கொழுத்தி வரவேற்றனர். இந்த மக்கள் யுத்த நிறுத்தத்தை நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்தனர். ஹமாஸ் இயக்கம் தொடராக இஸ்ரேல் – பலஸ்தீன மக்கள் மீது மேற்கொண்டு வரும் அநியாயங்களை உலகுக்கு உணர்த்துவதற்காகவே இந்த தாக்குதலை கடந்த ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி ஆரம்பித்தது. இதனால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, பல ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

சிறுவர்கள், குழந்தைகள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். எதுவும் அறியாத பச்சிளம் பாலகர்கள் ஆயிரக்கணக்கில் முடமாகியுள்ளனர். இஸ்ரேல் வான், தரைவழி தாக்குதல்கள் மூலம் பலஸ்தீனியர்களை வடக்கு காஸாவிலுள்ள சிறிய நிலப்பரப்பிற்குள் தள்ள எதிர்பார்த்தது. அதற்காக தெற்கில் இருந்த வைத்தியசாலைகள். பாடசாலைகள், அகதி முகாம்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தினர். தெற்கு காஸாவிலுள்ள மக்கள் தாமாகவே வெளியேறுவதற்குத் தூண்டும் வகையில் அந்த மக்களுக்கு உணவு, நீர் ஏனைய வைத்திய வசதிகள் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவற்காக அவ்வாறான நிறுவனங்களை தேடித்தேடி குண்டு வீசி அழித்துள்ளனர். இவ்வவளவு செய்தும் இஸ்ரேலால் அவர்களது இலக்கை அடைய முடியவில்லை. இந்தப் பின்னணியில் யுத்த நிறுத்தத்தை நீடிப்பது அவசியமாகும். இதற்காக யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்வதற்காக பங்கு வகித்த கட்டார் பெரு முயற்சிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. கட்டார் அண்மைக்காலமாக மோதல் இடம்பெறும் நாடுகளுக்கிடையே சமரஸத்தை ஏற்படுத்துவதற்காக மத்தியஸ்தம் செய்து வருகிறது. இஸ்ரேலுடனும், ஹமாஸுடனும் நெருங்கிய உறவினை பேணி வரும் கட்டார் யுத்த நிறுத்தத்தினை ஏற்படுத்துவதற்கு பெரும் பங்காற்றியது போன்று யுத்த நிறுத்தத்தை நீடிப்பதற்கும் இஸ்ரேல் – பலஸ்தீன் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கும் உதவவேண்டும். சுதந்திர பலஸ்தீன் உருவாவதன் மூலமே இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும். இதனை எழுதிக் கொண்டிருக்கும் போதே காஸாவில் இஸ்ரேல் படையினர் மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. எமது பிரார்த்தனை எப்படியாவது இரு தரப்பினருக்குமிடையே பேச்சுவார்த்தை நடாத்தி உடனடியாக யுத்த நிறுத்தத்தை நீடிப்பதாகும்.

சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் இரு தரபபினருக்கும் அழுத்தங்களை கொடுப்பது அவசியமாகும். இல்லாவிடில் ஒரு பிராந்திய யுத்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# ஓங்கும் கரங்களை ஒடிக்கும் கதிரைகள்!



சுஐப் எம்.காசிம்

நீருக்குள் நெருப்பை கடத்தும் அரசியல் காய்நகர்த்தல்கள், நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. 2024 இல் நடைபெறவுள்ள பல தேர்தல்களைக் கருத்திற்கொண்டுதான் இக்காய்கள் நகர்த்தப்படுகின்றன. கிரிக்கெட் சபை விவகாரம், பொலிஸ் மா அதிபர் நியமனம் மற்றும் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் புதிய அமைச்சுக்கள் எல்லாம் அரசாங்கத்துக்குள் நிலவும் அபிப்பிராய பேதங்களுக்கான சாட்சிகள்.

விளையாட்டுத்துறையும் இளைஞர் விவகாரமும் ஹரின் பெர்னாண்டோவுக்கும் கட்சியோ எதையும் கூறவில்லை. இதனால், பின்வரிசை எம்.பிக்களுக்கு தலைமையில் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாம். தென்னிலங்கையின் அதிகப்பெரும் ஆணையை தாரைவார்த்து கொடுத்ததில் என்ன பலன்? ஒரே குடும்பத்தினர் பாதுகாக்கப்பட்டுள்ளனரே தவிர கட்சிக்கு ஒரு நன்மையும் ஏற்படவில்லை. இந்நிலை நீடித்தால் “ஊமையன் கண்ட கனவாகிவிடும்“ தமது நிலைமையென நாமல் மட்டுமே ஆதங்கப்படுகிறார். ஆனால், இவரது பெற்றோர்கள் அமைதியாக இருப்பதற்கு ஒரு அர்த்தம் இல்லாமலா போகும்? டிசம்பர் 15இல் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாநாட்டுக்கு தலைமை தாங்கும் மஹிந்த அறிவிக்கவுள்ளதில்தான், அடுத்த களமும், கட்டமும் கட்டியங் கூறப்படும்.

பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டதிலிருந்து கட்டியங்கள் துலங்கத் தொடங்கிவிட்டன. இவரின் நியமனம் ராஜபக்ஷக்களுக்கு ஆறுதலானதாம். பொலிஸ் துறையில் செல்வாக்குச் செலுத்தி தமக்கு கச்சிதமாகப் பயன்படுத்திய அரசியலமைப்பு சபை ஒரே பிடியாக நின்றது.

நிலந்தஜெயவர்தன, லலித் பத்திநாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹன ஆகியோருக்கு மத்தியிலும் தென்னகோனை நியமிப்பதை தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியிருக்கவில்லை. 2020 நவம்பர் 17இல் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட சீ.டி.விக்ரமரத்னவின் மூன்று வருட பதவிக்காலம் 2023 மார்ச் 26 இல் முடிந்திருந்தது. இருந்தும் மும்மூன்று மாதங்களாக இரண்டு தடவைகள் இவரது சேவை நீடிக்கப்பட்டது. கடைசி ஆசைக்காக மூன்று வாரங்கள் நீடித்தார் ஜனாதிபதி.

அரசியலமைப்பு சபையின் எதிர்ப்பையும் மீறி சீ.டி.விக்ரமரத்னவுக்கு பதவி நீடிப்பு ஏன் வழங்கப்பட்டது? ஜனாதிபதியின் சிறப்பதிகாரம் இவ்விடயத்தில் தலையிடுவதைத் தடுப்பதற்கு இப்போது மூன்று வருடங்களுக்கு மேல் எவரும் பொலிஸ் மா அதிபராக நீடிக்க முடியாதவாறு ஏற்பாடுகள் வரவுள்ளன. பாராளுமன்ற பலம் இல்லாதுள்ள நிறைவேற்றதிகாரத்துக்கு ஏற்படும் நிலைமைகளே இவை.

ஈஸ்டர் தாக்குலை தடுக்கத் தவறிய இவருக்கு பொலிஸ் மா அதிபர் பதவி வழங்கியதில் அதிருப்தி தெரிவித்துள்ளார் மெல்கம் ரஞ்சித். இது மட்டுமா, 2021.05.09 அரகல வன்முறைகளின் குற்றவாளியாக தென்னகோனை குற்றம்சாட்டியிருந்தார் சட்டமா அதிபர். இதுபற்றி 2022 இல் சீ.டீ.விக்ரமரத்தனவுக்கு அவர் அறிவித்திருந்த வரலாற்றுப் பதிவும் புறக்கணிப்பட்டுள்ளது. இவருக்கு எதிரான எழுத்து மூல மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துமிருந்தது.

அரகல ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதி மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட 17 கோடியே 85 இலட்சம் ரூபாவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இந்த தென்னகோன் இணங்கவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் கையளிக்குமாறு உத்தரவிட்டு ஒரு தரப்பை பாதுகாத்துவிட்டார். இத்தனை சமாச்சாரங்களுக்குள்தான் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் தென்னகோன்.



நீர்ப்பாசனம் பவித்ராவுக்கும் வழங்கப்பட்டதிலிருந்து ஓங்கும் கரங்களை உணர்ந்து கொள்ளலாம். நஸீர் அஹமடின் அமைச்சு பறிபோன சந்தர்ப்பத்திலும் இவ்வாறு ஒரு சலசலப்பு ஏற்பட்டது. பறிக்கப்படும் அமைச்சுக்கள் பகிரப்படும் விதங்களிலிருந்து ஓங்கும் கரங்களையும் ஒடிக்க முனையும் கரங்களையும் ஊகிக்க முடிகிறது.

இருதலைக்கொள்ளி எறும்பாக தவிக்க நேரிட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவுகளை ஏற்படுத்தும், பிரித்தாளும் பிரயத்தனங்களாகவும் இவற்றை பார்க்கலாம். ரொஷான் ரணசிங்கவின் அமைச்சு பறிக்கப்பட்டமை குறித்து இதுவரைக்கும் ராஜபக்ஷக்கள் தரப்போ அல்லது அவர்களின் எதிரானவற்றை சமாளிப்பதற்கு தென்னகோனின் நியமனத்தை நம்பியுள்ளது இத்தரப்பு. அரகல ஆர்ப்பாட்டத்தில் இக்குடும்பத்தை பாதுகாக்க தென்னகோன் எடுத்த முயற்சிகள் இந்நாட்டில் ராஜபக்ஷக்களின் வாரிசுகளுக்கு வழிவிட்டுள்ளது.

மேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரான தென்னகோன், கொவிட் தொற்று காலங்களில் ஆற்றிய பணிகள் நாட்டுக்கே நன்மையளித்தன. இதனால்தான், பாதாளக் கோஷ்டி, ஆட்கடத்தல்கள் மற்றும் போதை ஒழிப்புக்கள் என்பவற்றுக்காக நியமிக்கப்பட்ட சிறப்புக்குழுவின் தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டார். இவ்வாறான இவரின் கடந்த கால திறமைகளை

இவரின் திறமையை அளவிடுவதற்கான தகுதிகாண் காலமாக இந்த பதில் பொலிஸ் மா அதிபர் பதவி இருக்குமா? அல்லது முடியாமல்போய், மூன்று வருடங்கள் நிலைக்குமா? நீருக்குள் நெருப்பை கடத்தும் அடுத்த கட்ட களங்களில் உள்ளன இதற்கான பதில்.

# சாய்ந்தமருது அல்ஹிலாலில்

## கல்முனை வலய மாணவர் பாராளுமன்றம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைய ”இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள்” என்ற மகுட வாக்கியத்துடன் கல்முனை கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு (29) புதன்கிழமை சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வினை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளரும் மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமுமான எம்.எஸ்.சஹ்துல் நஜீம் ஆரம்பித்து வைத்தார்.

மாணவர் பாராளுமன்ற அமைச்சர்களின் உரையும் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரைகளும் இதில் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது இந்நிகழ்வை சிறப்புற ஒழுங்கமைத்து சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸாரைப் பாராட்டி நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

# தலைமன்னாரிலிருந்து படகு மூலம் அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சம்



(திருச்சி எம். கே. ஷாகுல்)

இலங்கை தலைமன்னாரிலிருந்து படகு மூலம் 7 பேர் அகதிகளாக தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கு திங்கள்கிழமை அதிகாலை வந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தை அடுத்த தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் இலங்கை அகதிகள் வந்திருப்பதாக தமிழ்நாடு கடலோரப் பாதுகாப்புக் குழும பொலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அங்கு சென்ற போலீஸார் 4 வயது சிறுமி உள்பட 7 அகதிகளை மீட்டு மண்டபம் கடலோரப் பாதுகாப்புக் குழும காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், குழந்தை கேசவி இதய நோயால் பாதிக்கப்பட்டிருப்பதும், அவருக்கு தமிழகத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்காக அகதியாக வந்ததாகவும் தந்தை அமுதன் தெரிவித்தார். இதன்பிறகு, 7 அகதிகளையும் மண்டபம் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில், கடலோரப் பாதுகாப்புக் குழும பொலீஸார் ஒப்படைத்தனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, அங்கிருந்து தற்போது வரை 280-க்கும் மேற்பட்டோர் அகதிகளாக தமிழகத்துக்கு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)




உலகம் முழுவதும் வியாபித்து இருக்கும் மிகப் பெரிய வியாதி தான் இந்த இஸ்லாமிய போபியா... சுருக்கமாக சொல்லப்போனால் இஸ்லாமிய சமூகங்கள் மீது தேவையற்ற அச்சத்தை பிற சமூகத்தினர் கொண்டு இருப்பது தான் இதற்கு மூல காரணம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், இது போன்ற கற்பனாவாதம் திட்டமிட்டு அரசியல் ரீதியாக உலகம் முழுவதும் பரப்பப்படுவதை நாம் காண கூடியதாக இருக்கிறது.

இஸ்லாம் குறித்து பொதுவாக எல்லோருக்கும் அதிருப்தி இருப்பது இயல்பான ஒன்றாகவே தற்போதைய சமூகங்களில் மாறி வருவதன் தொடர்ச்சியை நாம் உலகம் முழுவதும் காண கூடியதாக இருக்கிறது. அதற்கு உலகம் கொடுத்துக்கொண்ட பெயர்தான் பயங்கரவாதம் என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

பயங்கரவாதத்தை முற்றிலுமாக தடை செய்த மார்க்கம் இஸ்லாம் என்பதை ஒரு வேளை முஸ்லிம்கள் உலகிற்கு வலிமையான முறையில் எடுத்து சொல்ல தவறி விட்டார்கள் என்பதில் ஐயமில்லை. இதனால் தான் இது போன்ற பெயர்கள் மற்றும் வசை சொற்களைப் அவர்கள் சந்தித்து வரக்கூடிய துரதிர்ஷ்டவசமான நிலைக்கு தள்ளப்படும் உள்ளார்கள்.

ஒரு வேளை இதனை மிகுந்த கவனத்துடன் இஸ்லாமிய உலகம் சிந்திக்க தவறினால் அதன் விளைவுகள் பாரதூரமான முறையில் அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இஸ்லாம் பயங்கரவாதத்தை எந்தவொரு அடிப்படையில் ஆதரிக்கிறது என்பதை தெளிவான ஆதாரங்களுடன் தெரிந்து கொண்டு பேச வேண்டும். அப்படி பேசுவதற்கு அவர்களிடம் எந்தவொரு தெளிவான ஆதாரங்களும் இல்லாத நிலையில் அவர்கள் முஸ்லிம்கள் குறித்து பொய்யான கற்பனை கதைகளையே கட்டவிழ்த்து விடுவதை நாம் காண கூடியதாக இருக்கிறது . இந்த விடயத்தில்

இஸ்லாமிய நம்பிக்கை கொண்டவர்கள் தவிர்த்து அவர்களின் நெருங்கி நட்பு வட்டாரத்தில் உள்ளவர்களிடம் கூட இஸ்லாம் குறித்த அவநம்பிக்கை மற்றும் அச்சம் மிகுந்த அளவில் இருப்பதை நாம் மறுக்க முடியாது.

இது போன்ற அவ நம்பிக்கைகளை சமீபத்திய சர்வதேச ஊடகங்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்தப்பட்ட தவறான பிம்பங்கள் என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை அறிந்து கொள்ள முன்வராத நிலையில் இது போன்ற அச்சம் அணைத்து சமூகத்தினர் மத்தியில் மிக ஆழமாக வேரூன்றி விடக் அபாயம் உள்ளதை நாம் மறுக்க முடியாது. இதனைத் தீர்க்க முஸ்லிம்கள் முன்வராத நிலையில் இது மிகவும் பாரதூரமான விளைவுகளையே சமூகத்தில் ஏற்படுத்தும் என்பதே நமது கவலையாக இங்கே பதிவு செய்து கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக அதாவது 1990 களுக்கு பின்னர் தான் இது போன்ற மோசமான அச்சம் ஏனைய சமூகத்தினர் மத்தியில் இஸ்லாம் குறித்து மிக ஆழமாக வேரூன்றி விட்டது . இது போன்ற நிலைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளதாக இருந்தாலும் சர்வதேச நாடுகள், அதுவும் மேற்குலகம் தொடர்ந்து இஸ்லாமிய அறம் மீது திட்டமிட்டு அவதூறுகளை அள்ளி வீச தவறவில்லை என்பதை நீங்கள் நம்ப வேண்டும். அதனைத் விளக்க நம்மிடம் ஏராளமான தரவுகள் உள்ளது .

### பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண் எங்கிருந்து உருவாகிறது!

நண்பர்களே, எந்தவொரு நாட்டின் மீது இஸ்லாமிய தேசங்கள் படையெடுப்பு செய்ததாக எந்தவொரு பதிவையும் நீங்கள் எமக்கு காட்சிப்படுத்த முடியாது . 1990 களுக்கு பின்னர் ஈராக் பாத் கட்சியின் தலைமை பொறுப்பில் இருந்த சதாம் ஹுசைன் தனது சகோதர நாடான குவைத் மீது ஒரு சிறிய போரை அரசியல் காரணங்களுக்காக நடத்தி விட்டு பின் வாங்கிய செய்திகள் மட்டுமே வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைத் போர் என்று சொல்வதை விட சிறிய மிரட்டல் நடவடிக்கை என்று மட்டுமே நாம் புரிந்து கொள்ள முடிகிறது .

பயங்கரவாதத்தை அடிப்படையில் ஒரு தேசமோ அல்லது மக்களோ செயல்பாடுகளை வகுத்து கொள்ள அவர்கள் பின்பற்றும் வாழ்க்கை முறை ஒரு காரணம் என்கிற பிரகடனங்களை மேற்குலகம் தற்போது முன்வைக்கிறது. ஒரு காலத்தில் அதாவது 1990 களுக்கு முன்னர் மேற்குலகின் பொது எதிரியாக இடதுசாரி சிந்தனைகள் மற்றும் சிந்தனையாளர்கள் வகைப்படுத்தப்பட்டு வந்துள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். 1982களுக்கு பின்னர் ஏற்பட்ட மாற்றங்களினால் சோவியத் ரஷ்யா பல்வேறு நாடுகளாக பிரிந்து போனது என்பது உண்மைதான். இதற்கு மூல காரணம் ஏகாதிபத்திய சிந்தனைகளை தன்னகத்தே கொண்டு இன்று உலகை முழுமையாக ஆள துடிக்கும் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே உண்மை.

நாம் கூறிய படி சர்வதேச அளவில் எந்தவொரு இஸ்லாமிய தேசமும் பிற சமூகத்தினர் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எந்தவொரு நிலையிலும் மேற்கொள்ளவில்லை. ஆனால், பிற மக்களின் வாழ்க்கை மற்றும் கலாசாரத்தை முற்றிலுமாக அழித்து விட்டு தனது உடை , உணவு மற்றும் முழுமையான வாழ்க்கை தத்துவங்களை பிற நாடுகளின் மீது திணித்து சந்தை பொருளாதார சிந்தனையை உருவாக்கியவர்கள் யார் என்பதை நாம் நன்கு அறிவோம். உலகம் முழுவதும் இந்த சந்தை பொருளாதார சிந்தனையின் விளைவாகவே அடிமைத்தனம் மற்றும் ஆயுதங்கள் விற்பனை களங்கள் தற்போது கொடி கட்டி பறக்கும் நிலைக்கு உலகம் தற்போது செயற்கையாக தள்ளப்பட்டு உள்ளது என்பது மிகுந்த கவலை தரும் செய்தியாக அமைந்துள்ளது.

நம்முடைய தெளிவான கேள்வி என்னவென்றால், அமெரிக்கா மற்றும் கிறிஸ்தவ மேற்குலக நாடுகள் உலகின் நடைபெறும் எல்லா பிரச்சினைகளுக்கும் தாங்கள் தான் தீர்வை தரக்கூடிய வகையில் வல்லமை கொண்டவர்கள் என்கிற பயங்கரவாத சிந்தனையை தன்னகத்தே கொண்டு செயல்பட்டு வருவதை காண முடிகிறது. இது போன்ற அடக்குமுறை மற்றும் ஏகாதிபத்திய சிந்தனைகள் உண்மையில் தலை தூக்கும் போது தான் அதனைத் எதிர்த்து கேள்விகள் எழுகின்றன. அதன் விளைவாகவே மோதல்கள் உருவாகிறது.இந்த மோதல்கள் பல்வேறு நாடுகளில் உரிமைகளை வேண்டியே நடைபெற்று வருகிறது. இந்த உரிமை வேண்டிய திடமான போராட்டத்தில் ஆயுத பரிமாற்றம் மற்றும் இன குழுக்களின் இயல்பான வளர்ச்சியை தான் அமெரிக்கா மற்றும் மேற்குலகம் பயங்கரவாதம் என்று தலைப்பிட்டு உலக சந்தைகளில் மிகப்பெரிய அளவில் ஆயுத தளவாட வியாபாரத்தை ஊக்குவிப்பு செய்து வருகின்றனர்.

அமெரிக்காவின் அடிப்படையிலான உற்பத்தி பொருளாதாரம் என்பது மிகவும் குறைந்த அளவிலான ஒன்று என்பதை பொருளாதார வல்லுனர்கள் மிகத் தெளிவாகவே உணர்ந்தது உள்ளார்கள். அமெரிக்கா பொருளாதாரம் முழுமையாக ஆயுத தளபாடங்கள் உற்பத்தி அடிப்படையில் ஆன ஒன்று என்பதை உலகம் புரிந்து கொள்ள அதிகம் காலம் தேவையில்லை என்பதே பொதுவான உண்மையாகும்.

மேற்கு ஆப்பிரிக்கா நாடுகளான புர்கினோ பசோ, மாலி, கினி, நைஜர் போன்ற மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இல்லாத இயற்கை வளங்களே கிடையாது எனலாம். இப்படி ஏராளமான வளங்கள் இந்த நாடுகளில் கொட்டிக் கிடக்கின்றது. ஆனாலும் உலகின் மிகவும் ஏழ்மை நாடுகளின் பட்டியலில் இந்த நாடுகள்தான் முன்னணியில் இருக்கின்றன. எப்படி? இந்த வறுமைக்கு காரணம் பிரான்ஸும் அமெரிக்காவும்தான். தற்போது ஐரோப்பிய நாடுகளில் எரியும் மூன்று பல்புகளில் ஒரு பல்புக்கான மின்சாரம் இந்த மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் யுரேனியத்திலிருந்து கிடைக்கிறது. இப்படி யுரேனியம் தொடங்கி பல இயற்கை வளங்களை இந்த நாடுகள் சுரங்கம் மூலம் கொள்ளையடித்து சென்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கு ஆதரவாக அந்நாட்டின் ஆட்சியாளர்கள் உடந்தையாக இருக்கிறார்கள். இதனைத் எதிர்த்து கூட்டப்பட்ட மாநாட்டில்

மொத்தம் உள்ள 54 ஆப்பிரிக்க நாடுகளில் 49 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளன. அதில் அமெரிக்கா, பிரான்ஸ் நாட்டிற்கு எதிராக தாங்கள் ஓரணியில் திரள்வதாக ஆப்பிரிக்க நாடுகள் உறுதியேற்றுள்ளன. குறிப்பாக புர்கினோ பசோ இந்த விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. இதையெல்லாம் கவனித்து வந்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள், புர்கினோ பசோ, மாலி, கினி, நைஜர் நாடுகளின் கிளர்ச்சி படையை தீவிரவாதிகள் என்று விமர்சித்துள்ளனர்.

ஈராக், ஆப்கானிஸ்தான், சூடான், மாலி, பாலஸ்தீனம், சிரியா, லெபனான், ஏமன், லிபியா போன்ற இஸ்லாமிய தேசங்களில் உள்ளே புகுந்த மேற்கத்திய படைகள் அந்த தேசத்தின் இறையாண்மையை முழுமையாக காவு கொண்டு அமைதியற்ற நிலையை அங்கு உருவாக்கினார்கள். இதன் மூலம் இன்று அங்கு ஒரு நிலையற்ற அரசை உருவாக்கி தங்களின் கைப்பாவையாக வைத்துக்கொள்ள முயற்சி செய்து வெற்றி பெற்று வருகின்றனர்.

இன்று இஸ்லாமிய உலகிலும் மேற்கிலும் ஏற்பட்டிருக்கும் நவீன இஸ்லாமிய எழுச்சியின் வேகமான அலைகள் உலக மக்களை அதனை நோக்கி திரும்பிப் பார்க்க வைத்துள்ளன. குறிப்பாக மேற்குலகில் மிக வேகமாக மனித உள்ளங்களை வசீகரித்து வரும் மார்க்கமாக இஸ்லாம் மாறியிருப்பது அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயங்களையும் விரோதப் போக்காளர்களையும் ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது. இஸ்லாமிய சமத்துவ சித்தாந்தம் மிகவும் ஆழமாக மேற்குலகம் முழுவதும் மிகவும் வேகமாக பரவி வருகிறது. இதன் விளைவாக கிறிஸ்தவ பாதிரிகளும் மேற்குலகின் சில அறிஞர்களும் இஸ்லாம் குறித்து போலியான கருத்தியல்களை முன்வைப்பதோடு முஸ்லிம்களை கொடூரமானவர்களாகவும் பயங்கரவாதிகளாகவும் காட்ட முனைந்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளினால் இஸ்லாத்திற்கு எதிரான போலியான பிம்பம் மேற்குலகால் கட்டமைக்கப்பட்டது.

மேற்குலகில் பரவிவருகின்ற அல்லது கட்டமைக்கப்பட்டிருக்கின்ற இஸ்லாமியப் பீதியின் பரிபாஷைக் கருத்தாகவே இது காணப்படுகின்றது. Islamophobia என்ற சொல் பீதி அச்சம் நோய் பயம் போன்ற கருத்துக்களைக் கொண்ட ஒரு கிரேக்க சொல்லாகும். 09/11 இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பின் மேற்குலகில் உருப்பெற்ற கருத்தியலாகவும் இதனை அடையாளப்படுத்தலாம்.

Islamophobia என்பது முஸ்லிம்களை மதத் தீவிரவாதிகளாகவும் இரக்கம் பண்பாடு என்பனவற்றை அறியாத மனித சமுதாயத்திற்கு எதிரான சமத்துவம்,மன்னிப்பு போன்ற மனித பண்புகளுக்கு விரோதமானவர்களாகவும் சித்தரிப்பதைக் குறிக்கின்றது.

இவ்வாறான கட்டமைப்பை மேற்கொள்வதன் மூலம் மேற்கு மக்களின் உள்ளங்களில் இஸ்லாம் பற்றிய மோசமான பிம்பங்கள் திட்டமிட்டு கட்டமைக்கப்படுகிறது. இது ஒரு நவீன காலப் போர் முறையாகும்.

நவீன தொழில்நுட்ப ராணுவ தளவாடங்கள் டேங்கர்கள் ஆர்ட்டெலிரி டேங்கர்கள் இவைகள் எல்லாவற்றையும் விட மோசமான ஆயுதம் எதுவென்றால் ஒரு சமூகத்தின் மீது வெறுப்பை உமிழும் நிலை என்பதில் எந்த ஐயமும் இல்லை. மேற்கத்திய உலகம் திட்டமிட்டு நடத்தும் இது போன்ற சதிகளை தாண்டி இஸ்லாம் இன்று உலகம் முழுவதும் பரவி வருவதற்கு அதன் ஆழமான சித்தாந்த முறைகள் தான் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்த வெறுப்பு மற்றும் புரிதல் அற்ற செயல்பாடுகள் ஆட்சியாளர்கள் மூலம் வேண்டும் என்றே தமக்கான அரசியல் இலாப கணக்கியல் அடிப்படையில் தான் உலகம் முழுவதும் அரங்கேற்றம் செய்யப்படுகிறது.

சமீபத்திய காலங்களில் இலங்கை மற்றும் இந்தியாவில் இஸ்லாமிய வெறுப்பு ஓரளவு வெற்றி பெற்று வருவதை நாம் காண முடிகிறது .இந்தியாவில் சங்க பரிவார அமைப்புக்கள் இதனைத்தான் திட்டமிட்டு செய்து வருகின்றனர். இலங்கையில் அதே பாணியிலான நடவடிக்கைகளை தான் பௌத்த மதத்தில் உள்ள கடும் போக்கை பின்பற்றுபவர்களின் தொடர் நடவடிக்கையாக இருந்து வருகிறது.

இந்தியா மற்றும் இலங்கையில் வாழும் பௌத்த மக்கள், இந்து மற்றும் இஸ்லாமிய சமூகத்தில் மிகுந்த ஒற்றுமை மிகவும் ஆழமாகவும், உறுதியாக இருப்பதை கண்ட இது போன்ற கடும் போக்குவாதிகள் தங்கள் நடைமுறையில் மாற்றம் கொண்டு வர தற்போது முயற்சி செய்து வருவதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. மக்களிடையே குழப்பம் மற்றும் அச்சத்தை உருவாக்கம் செய்வது மட்டுமே இவர்கள் பின்பற்றுகின்றனர் என்பதில் என்ன கருத்து வேறுபாடு இருக்க முடியும்?

இந்த நிலையில் ஒட்டு மொத்த மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய வெறுப்பின் மறுபக்கம் தற்போதைய நிகழ்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாக அமைந்துள்ளது.

நவீன தொழில்நுட்ப கருவிகள் மற்றும் ஊடகங்களின் வாயிலாக பல ஆண்டுகளாக தங்களுக்கு சாதகமான கருத்துருவாக்கத்தை உருவாக்கி வந்து அமெரிக்கா மற்றும் அதன் தோழமை தேசங்கள் முகங்கள் எதுவென்று அவர்களாலாலேயே மறைக்க முடியாத அளவுக்கு வெளி வந்து உள்ளது.

நவீன தொழில்நுட்ப கருவிகளுடன், அமெரிக்கா தேசத்தின் தோழமையுடன் உலகில் தம்மை எந்தவொரு சக்தியாலும் அசைக்க முடியாத சக்தியாக இதுவரை உலா வந்து கொண்டு இருந்த இஸ்ரேலிய அரசின் மறு முகத்தை உலகம் புரிந்து கொண்டு விட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் 16,000 பேரை படுகொலை செய்து விட்டு யூத அரசு பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து பேசுவது எத்தனை அடாவடித்தனம் என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ள அதிக காலம் எடுக்கவில்லை. 7,000 க்கு மேற்பட்ட அப்பாவி குழந்தைகளை படுகொலை செய்து விட்டு இவர்கள் தான் பயங்கரவாதம் மற்றும் மனித சமூகத்தின் பெருமைகளை பற்றி பேசுகிறார்கள் என்பதை கல் நெஞ்சம் கொண்ட எந்தவொரு மனிதனாலும் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள ஏனோ மறுக்கிறார்கள்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள அடிப்படையில் நீதி மறுக்கப்பட்ட நிலையில் போராடுவது தான் மனிதனின் இயல்பு. இந்த இயல்பை தான் முஸ்லிம்கள் தங்களின் உரிமை வேண்டி போராடும் சூழ்நிலையில் இதற்கு பயங்கரவாத நிறம் கொடுப்பது என்பதை நாம் எப்படி புரிந்து கொள்வது!

நவீன பயங்கரவாத சிந்தனைகள் பல்வேறு வகையான வடிவங்களில் வெளியாகி வருகிறது .முதலாவதாக ஆயுதங்களை கொண்டு மக்களை படுகொலை செய்வது, இரண்டாவதாக ஊடகங்கள் மூலம் ஒரு சமூகத்திற்கு எதிராக மோசமான கருத்துக்களை பொது சமூகத்திற்கு விதைப்பது, மூன்றாம் நிலை தான் பிரார்த்தனை பயங்கரவாதம் என்பதை நாம் புரிந்து கொள்ள முன் வர வேண்டும். இந்தியா, இலங்கை போன்ற தேசங்களில் கிறிஸ்தவ தேவாலயங்கள் முழுமையாக இஸ்ரவேல் சமூகத்தின் வெற்றிக்காக இவர்கள் நள்ளிரவு ஜெபங்களை முன்னெடுத்துச் செல்வதை காண கூடியதாக இருக்கிறது . யூதர்களின் வெளிப்படையான விரோதிகள் கிறிஸ்தவர்கள் என்பதை அவர்கள் அறிவிப்பு செய்தும் ஒரு அநீதி வெற்றி பெற வேண்டும் என்று நவீன கிறிஸ்தவ சமூகம் பிரார்த்தனை புரிவது தான் மிகுந்த மனவேதனை அளிக்க கூடிய வகையில் உள்ளது.

ஆகவே தான் எல்லா வகையிலும் இஸ்லாமிய சமூகத்திற்கு எதிராக அச்சத்தை பொது வெளியில் விதைப்பது என்பது ஒரு சர்வதேச சதி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல் எந்தவொரு இஸ்லாமிய சமூகமோ அல்லது தேசமோ பிற சமூகத்தினரின் உரிமைகளை பறிக்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை. பிற சமூகத்தினரின் தேசங்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அதேநேரத்தில் சில குழுக்கள் பொது இடங்களில் ஏனைய மக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவதை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

“இஸ்லாமிய ஃபோபியா” என்பதை நாம் மிகவும் எளிதாக கடந்து செல்ல இயலாது. ஏனெனில் சற்றேக்குறைய 2 பில்லியன் சனத்தொகை கொண்ட மிகப் பெரிய சமூகத்தின் மீது திட்டமிட்டு பரப்பப்படும் வெறுப்பு மற்றும் வன்மம் ஒட்டு மொத்த உலகிற்கும் எதிரான ஒன்றாகவே நாம் காண கூடியதாக இருக்கிறது . தற்போதைய தேசங்கள் ஒவ்வொன்றும் இணைந்து செயல்பட கூடிய தருணம் உருவாகி விட்டது. அதே நேரம் கல்வி, தொழில்நுட்ப அறிவு, கலாச்சாரம், மருத்துவம், விண்வெளி ஆய்வுகள் என்று நீண்ட தூர பயணத்தில் ஒவ்வொரு தேசமும் இணைந்து பணியாற்றி அதன் பலன்களை ஒட்டு மொத்த மனித குலத்திற்கும் அர்ப்பணிப்பு செய்ய வேண்டும். ஆனால், மேற்கத்திய சேதங்கள் இவைகளை எல்லாம் கடந்து ஒரு சமூகத்தின் மீது வெறுப்பு மற்றும் அச்சத்தை விதைப்பது மிகவும் ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதனைத் முழுமையாக அழித்தொழிக்கும் வரையில் மனித குலத்தின் ஒற்றுமை எட்டாக் கனியாகவே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை என்பதே எமது தெளிவான பார்வையாகும்.

# சம்மாந்துறை, மன்னார் வைத்தியசாலைகளின் குறைகளை நிவர்த்திக்குமாறு சுகாதார அமைச்சரிடம் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் கோரிக்கை!



“சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை 2017ஆம் ஆண்டிலிருந்து கணக்காளர் இல்லாமல் இயங்கி வருகிறது. உடனடியாக அந்த வெற்றிடத்தை நிரப்ப சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

வியாழக்கிழமை (30) பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

“எனது ஊரான மன்னார், தராபுரம் கிராமத்திலிருக்கும் வைத்தியசாலைக்கே கிராமத்தை சுற்றியுள்ள மக்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். அந்த வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர் அண்மையில் இராஜினாமா செய்துவிட்டு அவுஸ்திரேலியா சென்றுவிட்டார். அவருக்கு பதிலாக இன்னுமொரு வைத்தியரை அவ்விடத்துக்கு நியமிக்க வேண்டும். ஆனாலும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இன்னும் வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. எனவே, வைத்தியர் ஒருவரை நியமிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். .

அதேபோன்று, சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் பிரதேசமான சம்மாந்துறையில் உள்ள ஆதார வைத்தியசாலையில், 2017ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கணக்காளர் பதவி வெற்றிடமாகவே காணப்படுகின்றது. எனவே, அவ்வெற்றிடத்தை நிவர்த்தி செய்வதற்கு தயவு செய்து உதவுமாறு உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அத்துடன், இரண்டு இலட்சம் மக்கள் வசிக்கும் மன்னார் மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலையில் ஊவு ஸ்கேனர் ஒன்று இல்லாத காரணத்தினால், அங்குள்ள நோயாளிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புகின்றனர். இதனால், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு ஊவு ஸ்கேனர் ஒன்றை உடனடியாக பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றேன்” என்றார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் ஆவண செய்வதாக உறுதியளித்தார்.

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகத்தினால் உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிப்பு







(ஐ. ஏ. காதிர் கான்)

வெல்லம்பிட்டிய - பொல்வத்த பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுகள் அடங்கிய பொதிகள், பொல்வத்த இமெக்ஸ் வரவேற்பு மண்டபத்தில் (29) புதன்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறூக் புர்கி மற்றும் கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியரும், சவூதி அரேபியாவின் ”அரப் நியூஸ்” இலங்கைக்கான செய்தியாளருமான மொஹமட் ரஸூல் தீன் ஆகியோர் இணைந்து இப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

அகில இலங்கை வை.டப்ளியூ. எம்.ஏ. யின் தலைவி பவாஸா தாஹா ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்வில், கொழும்பு டைம்ஸ் சார்பாக அதன் பிரதம ஆசிரியர் மொஹமட் ரஸூல் தீன், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் உமர் பாறூக் புர்கிற்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவ தேவையாளர்களின் நன்மை கருதி யாழில் இலவச தங்குமிட வசதி

(ஐ. ஏ. காதிர் கான்)

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வருகை தருவோர், அவர்களின் தங்குமிட வசதிக்காக பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு, யாழ். மர்யம் ஜ/ம்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் நிர்வாகத்தினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நலன் விரும்பி ஒருவர் ஊடாக, யாழ். வரும் நோயாளிகள் தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கான மற்றும் நோயாளிகளைப் பராமரிப்போருக்கான இலவச தங்குமிட வசதி ஒன்றை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர்.

இந்நிலையில், சிரமங்களைத் தவிர்த்து, நேர்த்தியான நிர்வாக நடவடிக்கைகளை வழங்குவதற்கு வசதியாக, முன் கூட்டியே தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு, பள்ளிவாயல் நிர்வாகத்தினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மர்யம் ஜ/ம்ஆ மஸ்ஜித் தலைவர் - அஷ்-ஷெய்க் பைஸர் எம். அலியார் - காஸிமி - மதனி ( 0777155119 / 0778831938 ) என்பவரோடு தொடர்பு கொள்வதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



இது தவிர, இப்பள்ளிவாயல் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற இவ் இலவச சேவை, மென்மேலும் விருத்தி செய்யப்பட வேண்டிய கட்டாய நிலையில் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ள நிர்வாகம், இவ் இலவச சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அழைப்பை மேற்கொள்வோரில் 50 வீதமானவர்களுக்கே குறித்த இச்செயற்றிட்டத்தின் மூலம் பயனடையக் கூடியதான வசதிகள் இருப்பதாகவும், இந்நிலையில் ஏனையோரும் இச்சேவைகளை இலவசமாகப் பெற்றுப் பயனடையும் விதமாக, தனவந்தர்கள் மற்றும் நல்லுள்ளம் படைத்தவர்களிடமிருந்தும் இதற்கான உதவி ஒத்தாசைகளை நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதாகவும், அத்துடன் இதுபோன்ற சிறந்த கைங்கரியமான நல்ல காரியங்களில் இணைந்து கொள்ள அழைப்பு விடுப்பதாகவும், பள்ளிவாயல் நிர்வாகம் மேலும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

# களுத்துறை நூருத் தீனிய்யாஹ்வில் மீலாத் விழா







(பீ .எம். முக்தார்)

களுத்துறை மாவட்டத்திலுள்ள வெலிப்பன்னை மீலாத் கமிட்டியும் நூருத் தீனிய்யாஹ் நிர்வாகமும் இணைந்து நடாத்திய மாபெரும் மீலாதுன் நபி விழா மற்றும் பரிசளிப்பு வைபவம் சென்ற (25, 26) திகதிகளில் வெலிப்பன்னை ரஹ்மானிய்யா மஹா வித்தியாலய தேசிய பாடசாலை மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

வெலிப்பன்னையிலுள்ள பன்னிரண்டு குர்ஆன் மத்ரஸ ாக்களை ஒன்றிணைத்து நடாத்தப்பட்ட இவ் விழாவில் மாணவர்களின் கிராஅத், தர்ஜ/மதுல் குர்ஆன், ஹதீஸ், சந்தர்ப்ப துஆ, பேச்சு, உரையாடல், கஸீதா, வில்லுப்பாட்டு மற்றும் இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகள் என்பன மேடையேற்றப்பட்டன.

மீலாத் சன்மார்க்க அறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறார்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ் விழாவின் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் இஸட். ஏ.எம் பைஸால் கலந்து சிறப்பித்துடன் விஷேட பேச்சாளர்களாக பாணந்துறை ஊர்மனை அல்முபாரக் தக்கியாவின் மௌலவி முஹம்மத் இர்ஷ ாத் ஆலிம் (முஸ்தபவி) மற்றும் பலபிட்டி அஹதிய்யா பாடசாலை அதிபர் மௌலவி முஹம்மத் நஸ்மி ஆலிம் (முஸ்தபவி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் விழாவிற்கு அதிபர் முஹம்மத் நௌமான், மத்துகம பிரதேச சபை முன்னால் உறுப்பினர் ஏ.எச்.எம் ரம்ஸான், நூருத்தீனியா பொறுப்பாளர் எஸ்.எச்.எம் இல்யாஸ் உட்பட முன்னால் அதிபர்கள், குர்ஆன் மத்ரஸாக்களின் அதிபர்கள், விரிவுரையாளர்கள் பல்துறைகளையும் சார்ந்த பெருமக்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், பள்ளிவாசல்கள் தக்கியாவின் பொறுப்பாளர்கள், ஊர் மக்கள் மற்றும் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திஹாரிய தாருஸ்ஸலாம் பாடசாலையின் சிறுவர் சந்தை





திஹாரிய தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலையின் தரம் 03 மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான மாணவர் சிறுவர் சந்தை இன்று(29) நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தமது கணித அறிவையும், சமூகத்தில் தொடர்பாடல் விருத்தி, மற்றும் வியாபார நுணுக்கங்கள் என்பவற்றை பாடசாலையிலேயே கற்றுக் கொடுக்கும் பயிற்சியாக குறித்த பாடசாலையில் மாதிரி சந்தை நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த சந்தையில் மாணவர்கள் தமது வீட்டுத்தோட்டத்தில் விளைந்த காய்கறிகள், தேங்காய், கீரை வகைகள், பழங்கள் மற்றும் கைப்பணிப் பொருட்கள், கற்றல் உபகரணங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் தமது விற்பனைப் பொருட்களை வியாபாரம் செய்த அதேவேளை பெற்றோரும், பாடசாலை மாணவர்களும் சிறுவர்களிடம் பணம் கொடுத்து பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

குறித்த மாதிரி சந்தை இணைப்பாடவிதான இச் செயற்பாடுகள் மாணவர்களின் தனி ஆளுமை விருத்தியை வெளிக்கொண்டு வரும் வகையில் காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பக்கச்சார்பாக வழிநடத்தப்படும் பாராளுமன்றம்: மறைமுக சூத்திரதாரி யார்?

## - இம்தியாஸ் எம்.பி கேள்வி -



டயானா கமகே, சுஜித் சன்ஜய பெரேரா,ரோஹன பண்டார எம்.பி.க்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக சபாநாயகர் நியமித்த விசாரணை குழுவில் நானும் உறுப்பினராகும். சமல் ராஜபக்சவும் உறுப்பினராகும். ஆனால் எமது குழுவின் பரிந்துரைகளுக்கு மாற்றமான தீர்மானத்தை எடுத்துள்ள சிறப்புரிமை மீறல்கள் தொடர்பான குழுவின் தலைவரும் சமல் ராஜபக்சவேயாகும். இது எப்படி சாத்தியமாகும்?. எனவே இந்த பாராளுமன்றத்தை வழிநடத்தும் மறைமுக சூத்திரதாரி யார்?. பக்கச்சார்பான முறையில் பாராளுமன்றம் வழிநடத்தப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் சபையில் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் எம்.பி.க்களின் சிறப்புரிமைகளையும் பாதுகாக்குமாறு ஜனாதிபதியிடமும் சபாநாயகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

டயானா கமகே, சுஜித் சன்ஜய பெரேரா,ரோஹன பண்டார ஆகியோரின் பாராளுமன்ற அமர்வு தடை விதிக்கப்பட்டமை அடுத்து விசாரணைக்குழுவின் உறுப்பினராக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், மேற்குறிப்பிட்ட மூன்று எம்.பி.க்களுக்கு இடையில் ஏற்பட்ட அசம்பாவிதம் தொடர்பாக நானும் அங்கத்துவம் வகிக்கும் சபாநாயகர் நியமித்த விசாரணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் , டயானா கமகேவுக்கு 3 மாதமும் ரோஹன பண்டாரவுக்கு இரு வாரமும் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள தடை விதிப்பதுடன் சுஜித் எம்.பிக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்றே தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த தீர்மானம் முழுமையாக மாற்றப்பட்டுள்ளது. இது பக்கச்சார்பான செயற்பாடாகும். பாராளுமன்ற நடவடிக்கைகளை மக்கள் அனைவரும் உன்னிப்பாக அவதானிக்கின்றனர். ஆகவே பாராளுமன்றத்தின் நன்மதிப்பை பாதுகாக்க வேண்டும் என்றார்

## மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் கல்லூரியின் இஸ்லாமிய தின நிகழ்வின் பரிசளிப்பு விழா





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் கல்லூரியின் இஸ்லாமிய தின நிகழ்வின் பரிசளிப்பு விழா அண்மையில் மருதானை டவர் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் ஏ.எம்.ஹசீன் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸல் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக வலயக் கல்விப் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் எச்.ஏ.கே.யு. ஐ. ஹெட்டியாராச்சியும் விஷேட அதிதிகளாக பாடசாலையின் முன்னாள் அதிபர் கே.எம்.நாளிர், சீனத் ரேடிங் கம்பனியின் தலைவர் ஏ.எச்.எம்.மாஹிர் உள்ளிட்ட நலன் விரும்பிகள், பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பெரும் திரளானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது மாணவர்களின் இஸ்லாமிய கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் இஸ்லாமிய போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறைசேரிக்கு 7 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று இடம்பெற்ற முக்கிய சந்திப்பின் போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, 4 பில்லியன் ரூபா காசோலையை திறைசேரியிடம் கையளித்தார்.

தொழில் அமைச்சின் கீழ் செயல்பட்டுவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் (SLBFE) இந்த ஆண்டு பெறப்பட்ட மொத்த வருமானத்தின் 7 பில்லியன் ரூபா திறைசேரிக்கு பங்களிப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது அமைச்சின் செயலாளர் திரு. ஆர்.பி.ஏ. விமலவீர ளுடுடீகுநு இன் தலைவர் ஹில்மி அஸ ீஸ் மற்றும் ஏனைய சிரேஷ்ட பிரமுகர்கள் உட்பட அமைச்சின் முக்கிய அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது, அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட 2023 நடவடிக்கையின் காரணமாக இந்த முடிவு எட்டப்பட்டதாக இதன் போது குழுவினர் தெளிவுபடுத்தினர்.

7 பில்லியன் ரூபாவில் 3 பில்லியன் ரூபா இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டதுடன், அந்த வேளை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு மருந்து கொள்வனவுக்காக 100 மில்லியன் ரூபாவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சினால் தற்போது அமுல்படுத்தப்படும் முக்கிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினார். கரு சரு திட்டத்தின் ஊடாக இலங்கையின் முறைசாரா துறையில் பணிபுரிவோருக்கு தொழில் கௌரவத்தை வழங்கி, அவர்களை சமூக பாதுகாப்பு திட்டங்களில் இணைப்பதுடன், தொழில் சந்தை தொடர்பான தகவல் அமைப்புடன் அவர்களை ஒன்றிணைக்கவும் விரும்புவதாகவும் அமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

வெளிநாட்டு ஊழியர்களின் சங்கங்கள் இணைந்து நாட்டிற்கு பணம் அனுப்புவதை அதிகரிப்பது குறித்தும் அமைச்சர் விளக்கமளித்ததுடன், மின்சாரக் கார்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி முறை அறிமுகம், ஸ்மார்ட் கிளப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தொழில் வழிகாட்டல் பணிகள் குறித்தும் அமைச்சர் இதன்போது ஜனாதிபதியிடம் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த 18 மாதங்களில் 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் பணமாகப் பெறப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பிற்காக பணம் அனுப்புவதற்கான வழிமுறைகள் அமைப்பது குறித்தும் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு அந்நிய செலாவணி வருவதற்கான முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணப்பரிமாற்றங்களை குறிப்பிட்ட ஜனாதிபதி, அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் குறித்தும் தனது மகிழ்ச்சியையும் தெரிவித்தார். தொழில் சட்டங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் ஜனாதிபதி பாராட்டினார்.



வரகாபொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியிலிருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய கைசர் அஹமத் 182 புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.வகுப்பாசிரியை பரூஷாவின் வழிகாட்டலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள இவர் வரகாபொளையைச் சேர்ந்த ஹஸ்மத் அலி -பாத்திமா ஷிபானா தம்பதிகளின் புதல்வரும் ஆவார்.



வரகாபொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம் எப் இல்மா இந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். வகுப்பாசிரியை பரூஷாவின் வழிகாட்டலில் இப் பெறுபேற்றைப் பெற்றுள்ள இவர் வரகாபொளையைச் சேர்ந்த பிர்னாஸ்-பர்ஸானா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

## "முயற்சி திருவினையாக்கும்" எனும் வாசகத்தை உண்மையாக்கிய கிராமியப் பாடசாலை மாணவி

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் சென்ற 2023 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிலையில் மாவனல்லை, ஹெம்மாத்தகமை பிரதேசத்துக்குற்பட்ட மடுள்போவை பாதிபிய்யா மகா வித்தியாலய மாணவர்களில் 03 பேர் 9A சித்திகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 75 வருடங்களில் முதற் தடவையாக நதா அஸ்லம், மரியம் ஹஸ்வர், ஸாரா ரியாஸ ி ஆகிய மாணவியர்கள் 9யு சித்திகளை பெற்றுக்கொண்டதுடன்ஏனைய மாணவர்களும், மாணவியர்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலையின் பக்கம் பலரது கவனத்தை ஈர்க்கச் செய்துள்ளனர்.

அத்தோடு நதா அஸ்லம், மரியம் ஹஸ்வர் எனும் மாணவியர்கள் புலமைப் பரிசில் பரீட்சையிலும் சிறந்த பொறுப்பேற்றைப் பெற்றுக்கொண்டதோடு , நதா அஸ்லம் எனும் மாணவி க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவிலும், மரியம் ஹஸ்வர் எனும் மாணவி க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவிலும் தமது உயர்கல்வியை தொடர்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதில் விஷேடமாக ஸாரா ரியாஸி என்ற தரம் 10 ஐச் சேர்ந்த மாணவி க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி 9யு சித்திகளை பெற்று பாடசாலையின் வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.அத்துடன் இம் மாணவி தரம் 05 புலமை பரிசில் பரீட்சையிலும் 179 புள்ளிகளை பெற்று இதே பாடசாலைக்கு பெருமை சேர்த்தவராவார்




தாயாரின் விருப்பத்தை பூர்த்தி செய்யவும், காலத்தை சேமிக்கும் முகமாகவும் இம் முயற்ச்சியை எடுத்துள்ளார் என்பது பாராட்டத்தக்க விடயமாகும்.அத்தோடு க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

-ஆதிப் ராசிக்-



# றொசான் கிளீன் போல்ட்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கை கிரிக்கட்டை சர்வதேச கிரிக்கட் கவுன்சில் தடை செய்திருப்பதால் ஜனாதிபதிக்கும் விளையாட்டுத் துறை அமைச்சருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே அமைச்சரை பதவி நீக்குகின்ற அளவிற்கு நிலைமை மோசமாகியது. கிரிக்கட்டில் வெற்றி தோல்வியை நிச்சயமாக யாராலும் தீர்மானிக்க முடியாது. அதுபோல் அரசியலிலும் பதவிகள், அதிகாரங்கள் நிரந்தரமற்றது என்பதற்கு இந்த நிகழ்வு எடுத்துக்காட்டாக அமைகின்றது. வேறு வார்த்தையில் கூறுவதானால் ஜனாதிபதியின் பேச்சுக்கு அடங்காத அல்லது ஆமா சாமி போடாத விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க ஜனாதிபதியால் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சர் பதவியை பறித்தெடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார் என்றே கூற வேண்டும்.

2023.11.27 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை மாநாட்டில் விளையாட்டுத்துறை அமைச்சரை பதவி நீக்குவது தொடர்பான ஜனாதிபதியின் கடிதம் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதியின் அதிரடியான இந்த முடிவு அரசியல் அரங்கில் பெரும் சர்ச்சையை உருவாக்கி இருக்கின்றது. ஸ்ரீ லங்கா கிரிக்கட் நிறுவனத்திற்கும் அதன் தலைவர் சம்மி சில்வாவின் தலைமையின் கீழ் பாரியளவிலான ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக கூறி அதுபற்றிய தகவல்களை பாராளுமன்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்கா தைரியமாக வெளிக் கொண்டு வந்தார். ஸ்ரீ லங்கா கிரிக்கட் நிறுவனத்தை பதவி நீக்க வேண்டும் என்ற பிரேரணை 2023 நவம்பர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் ஆளும் கட்சிக்குள்ளிருந்தே அமைச்சர் ஒருவர் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பிய முதல் சம்பவமாக அது அமைகின்றது.

ஸ்ரீ லங்கா கிரிக்கட் நிறுவனத்திற்குள் அதனை தலைவர் சம்மி சில்வாவின் தலைமையில் கோடிக்கணக்கில் இடம்பெற்றுள்ள ஊழல்களை வெளிப் படுத்தியமைக்காக அமைச்சர் ரொசான் ரணசிங்காவை ஜனாதிபதி அதிரடியாக பதவி நீக்க நடவடிக்கை எடுத்தார். இந்த சம்பவமானது ஊழலை ஒழிக்க அரச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஜனாதிபதியே ஊழலுக்கு தலை வணங்கியவராக ஸ்ரீ லங்கா கிரிக்கட்டின் செல்வாக்கு காரணமாக அமைச்சரை பதவி நீக்கம் செய்திருப்பதானது இந்நாட்டில் தொடர்ந்து ஊழல்வாதிகளுக்கு பாதுகாப்பும் அரச மட்ட ஆதரவும் இருக்கின்றது என்பதை நிரூபித்திருக்கின்றது. ஐ.சி.சி. யின் தலைவர் கிரேக் பாக்லே இலங்கைக்கு வர இருக்கின்ற நிலையில் அவரது நல்லெண்ணத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் அமைச்சருக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இலங்கை கிரிக்கட்டின் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்த அவர் இங்கு வர ஏற்பாடாகி இருக்கின்றது.

விளையாட்டுத் துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க விஷேட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை ஒக்டோபர் 18 ஆம் திகதி வெளியிட்ட பின்னர் ஸ்ரீ லங்கா கிரிக்கட் சபையின் இடைக்கால நிர்வாக சபையை பதவி நீக்கம் செய்துவிட்டு இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் 07 பேர்களைக் கொண்ட புதிய சபையொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்தார். அமைச்சரின் இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து ஸ்ரீ லங்கா கிரிக்கட் நிறுவனத்தின் இடைக்கால சபையின் தலைவர் சம்மி சில்வா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்து 2023.11.07 ஆம் திகதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட புதிய சபைக்கு எதிராக நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவொன்றை பெற்றுக்கொண்டார்.

ஏக காலத்தில் பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்ட மறு தினம் சர்வதேச கிரிக்கட் கவுன்சில் இலங்கை கிரிக்கட் மீது சர்வதேச தடையை விதித்தது. அதனால் இலங்கை கிரிக்கட்டின் நிலை கவலைக்கிடமானதாக மாறியது. இலங்கை அணிக்கு சர்வதேச ரீதியாக பாரிய அபகீர்த்தி ஏற்படுவதாகவும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தடையும் விதிக்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கட் கவுன்சிலின் நிறைவேற்று குழு கூட்டத்தில் ஏற்கனவே இலங்கையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த 19 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களின் இளையோர் சர்வதேச உலக கிண்ண போட்டிகள் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது. இலங்கை கிரிக்கட்டில் அரசியல் தலையீடு ஏற்பட்டிருக்கின்றது என்ற ஒரே குற்றச்சாட்டே ஐ.சி.சி. இலங்கை கிரிக்கட் மீது இவ்வாறு தடைவிதிக்க காரணமாக சொல்லப்பட்டது.

ஆனாலும் இந்த தடை விதிப்பதற்கு காரணம் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் தலைவர் சம்மி சில்வாவே என்று விளையாட்டுத் துறை அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் பாராளுமன்றத்தில் குற்றம்சாட்டினர். அதனை நிரூபிக்கும் வகையில் சம்மி சில்வாவினால் சர்வதேச கிரிக்கட் கவுன்சிலுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் பிரதிகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனாலும் ஜனாதிபதி விளையாட்டுத் துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால சபையை வாபஸ் பெறுமாறும் அது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறுமாறும் அமைச்சரை வலியுறுத்தி இருந்தார். ஆனால் அமைச்சர் தொடர்ச்சியாக அவரது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துள்ளார். அதனால் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி அடிமையாகி ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு அமைச்சரை பதவி நீக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன் மறைமுகமாக அமைச்சர் மீது வேறு குற்றச்சாட்டுக்களும் முன்வைக் கப்பட்டுள்ளன. அமைச்சர் ரொசான் ரணசிங்கா எதிர்க்கட்சி அலுவலகத்திற்கு சென்று எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகள் ஆகியோருடன் இரகசியமாக கலந்துரையாடல் நடத்தியமை குறித்து ஜனாதிபதி விளக்கம் கோரி அனுப்பிய கடிதத்திற்கு அமைச்சர் உரிய முறையில் பதிலளிக்க தவறியதால் அவரது பொறுப்பை உதாசீனம் செய்தார் என்ற காரணத்திற்காகவே அமைச்சர் பதவியில் இருந்து தூக்கி வீசப்பட்டார் என்ற தகவலை ஜனாதிபதி ஊடக பிரிவு அரச ஊடகங்களுக்கு தகவலாக வழங்கி இருந்தது. அது தொடர்பாக அமைச்சர் 2023.11.28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஒழுங்கு பிரச்சினையொன்றை கிளப்பி சபாநாயகரிடம் முறையிட்டார்.

ஆனாலும் இந்த பதவி பறிப்பு பற்றி அமைச்சர் பாராளுமன்றத்தில் பேசும் போது தான் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி இடைக்கால சபை நியமித்ததாகவும், அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதாகவும் இந்த இரண்டையும் வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி தன்னை வலியுறுத்தியதாகவும் 1973 ஆம் ஆண்டின் விளையாட்டு சட்டத்தின் பிரகாரம் அமைச்சர் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தியே அவ்வாறு செய்ததாகவும் அந்த சட்டம் அமைச்சரவையை விட உயர்வான அதிகாரமாகும் என்றும் ஜனாதிபதியாலும் சாகல ரத்நாயக்காவாலும் அமைச்சரின் உயிருக்கு அச்சுறுத்தலும் ஆபத்தும் ஏற்பட்டிருக்கின்றது என்றும் சபாநாயகர் தனது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அமைச்சரை இவ்வாறு பதவி நீக்கியமை பற்றி முன்னாள் ஜனாதிபதியும் மொட்டு சாம்ராஜ்யத்தின் அதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிடுகையில் “ அரசியலில் எதுவும் நிரந்தரம் இல்லை என்றார். இவ்வாறு அமைச்சர்களை பதவி நீக்கி உள்ளனர்“ தமது கட்சிக்காரர் ஒருவரை அமைச்சரவையில் இருந்து பதவியை பறித்து வெளியே போட்டமை பற்றி அவர் எந்தவிதமான கவலையையும் தெரிவிக்கவில்லை. பாராளுமன்றத்திலும் மொட்டு கட்சி ஆதரவாளர்கள் 100 இற்கும் மேற்பட்டவர்கள் இருந்தும் எவரும் இந்த அமைச்சரை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்றியமை தொடர்பாக எந்த கருத்தையும் தெரிவிக்காமல் வாய் மூடி மௌனம் சாதிக்கின்றர். இனி அரசில் இருக்கும் யாரும் அரசை விமர்சிக்கப் போவதில்லை. விமர்சித்தால் அடுத்த கட்ட நடவடிக்கை எவ்வாறு அமையும் என்பதற்கு படிப்பினையாக ரொசானின் பதவி பறிப்பு சுட்டிக்காட்டுகின்றது.

இனிமேல் அரசிற்குள் இருந்து யாரும் ஜனாதிபதியின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், தீர்மானங்களை விமர்சிக்காமல் இருப்பதற்கும், எதிராக வெளியில் பேசவோ செயற்படாமல் இருப்பதற்கும் படிப்பினையாக இருக்கவே இவ்வாறான ஒரு அதிரடி முடிவை எடுத்து ரொசானை வெளியே போட்டுள்ளார். எவ்வாறாயினும் ஜனநாயகம் என்ற போர்வையில் ஊழலுக்கு எதிராக பேசியதால் இந்த நிலை ஏற்பட்டது என்பதை முழு நாடே அறியும். அதனால் மக்கள் மத்தியிலும் அரசில் மட்டங்களிலும் ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைக்கு கடுமையான எதிரலைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.


அதே நேரம் ரொஷான் ரணசிங்க நவம்பர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி உயர் நீதிமன்ற நீதிபதியை பற்றி குறிப்பிட்டமையானது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என்ற அடிப் படையில் முன்னாள் அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணி திருமதி தினிதி சிராப் ஒகஸ்டஸ் என்வர் மனுவொன்றையும் தாக்கல் செய்யதிருக்கின்றார். முன்னாள் அமைச்சர் கடந்த டிசம்பர் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசும் போது அமைச்சரின் தீர்மானத்திற்கு இடைக்கால தடை உத்தரவு வழங்கி நீதிபதி மேசடி கும்பலுக்கு பாதுகாப்பு வழங்கியதாக பாராளுமன்றத்தில் தெரிவித்தமை நீதித்துறையின் சுயாதீனத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்ததால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டிருக்கின்றது.

அத்துடன் கடந்த 27 ஆம் திகதி அமைச்சராக இருந்த ரொசான் ரணசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அமைச்சரவை கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக தெரிவித்தவைகள் அமைச்சரவை இரகசியங்களை மீறுவதாகவும் அமைச்சரவை கூட்டுப் பொறுப்பை மீறும் வகையிலும் இருக்கின்றனவா? அவ்வாறு மீறும் வகையில் அமைந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்ற விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடி இருப்பதாகவும் அறிய முடிகின்றது.

அதிலும் நாட்டில் அதி கூடிய அதிகாரம் கொண்ட நிறுவனம் அமைச்சரவையா பாராளுமன்றமா என்ற தெளிவை வழங்குமாறும் சட்டமா அதிபர் திணை க்களத்திடம் கோரி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இது ஒரு புதுமையான சந்தேகமாக இருக்கின்றது. இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கா பல முறை நாட்டின் பிரதமராகவும் சுமார் 40 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் அறிவையும் அனுபவத்தையும் பெற்ற ஒருவராவார். இலங்கை சுதந்திரம் அடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைந்தும் இதுவரையில் அதிகாரம் பாராளுமன்றத்திற்கா அமைச்சரவைக்கா என்ற தெளிவின்மை நாட்டின் மூத்த அரசியல்வாதிக்கு நிலவுவது புதுமையாக இருக்கின்றது.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னாள் அமைச்சராக இருந்த ரொசானை எப்படியும் மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்கான திட்டங்களாகவே தென்படுகின்றன. ஏனெனில் ஊழலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய முன்னாள் அமைச்சர் கைவைத்தது பில்லியன் கணக்கிலான டொலர்களில் புரண்டு விளையாடும் ஸ்ரீ லங்கா கிரிக்கட் தலைவர் சம்மி சில்வாவுக்கு எதிரானதாக இருந்ததால் இப்போது அமைச்சர் தோல்வி கண்டு சம்மி சில்வா வெற்றி பெற்றுள்ள நிலையில் எப்படியெல்லாமோ அவரை பழி தீர்க்கும் திட்டங்கள் தொடரலாம் என்று ரொசான் ரணசிங்காவே கடந்த 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அப்படியானால் இனி நடக்கும் அனைத்தும் அதன் எதிரொலியாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

# மட்டு. காணிப் பிரச்சினை தீர்ந்தால் அது இமாலய சாதனை





ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணியில்லாப் பிரச்சினையைப் பற்றியும் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டுள்ள பிரச்சினைகளைப் பற்றியும் இதற்கு முன்னரும் அக்கறையுள்ள பலரும் சிரத்தை எடுத்து வந்துள்ளார்கள்.

கிழக்கு மாகாண காணிகள் தொடர்பாக தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுத் தலைவர் ஆர். சம்பந்தன் 2009.10.23 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணையின்போது அப்போதைய இடர் நிவாரண சேவைகள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீரலி கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள் சம்பந்தமாக விரிவாகப் பேசினார்.

அமீரலியின் நாடாளுமன்ற உரை இவ்வாறு அமைந்திருந்தது

இந்த சபையிலே நான் மிகவும் கௌரவமாக மதிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயா அவர்கள் கிழக்கு மாகாணத்தில் அரச காணிகளிலே சட்ட விரோதமாகக் குடியேறியிருக்கின்றவர்களை வெளியேற்றுவது சம்பந்தமாக அதனோடு சேர்ந்த பல கேள்விகளையும் உள்ளடக்கியதாக ஒத்திவைப்புப் பிரேரணையில் இங்கு அவரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிகழ்விலே நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

அந்தக் கேள்விகளுக்கு பதில் கொடுப்பதற்கு முன்பாக கடந்த கால ஆரம்ப விடயங்கள் பிரச்சினைகள் சம்பந்ததாகவும் சற்று நான் பேச வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

கௌரவ சம்பந்தன் ஐயா அவர்கள் கிழக்கு மாகாணத்திலே அரச காணிகளில் சட்டவிரோதமாகக் குடியேறியிருக்கின்றவர்கள் வெளியேற வேண்டும் என்கின்ற பிரேரணையிலே மட்டக்களப்பு மாவட்டத்திலே சட்டபூர்வமான ஆதாரங்களோடு இருக்கின்றவர்களுக்குரிய காணி உடனடியாக வழங்கப்பட வேண்டும் அல்லது அதற்குத் தடையாக இருக்கின்றவர்கள் அதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என்று கூறியிருப்பாரென்றால் நான் சந்தோசடைந்திருப்பேன்.

கடந்த காலங்களிலே என்னுடைய பாராளுமன்றப் பேச்சுக்களிலே நான் தெளிவாகக் கூறியிருக்கின்றேன் விஷேடமாக கிழக்கு மாகாணத்திலே இந்தப் பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக ஒவ்வொரு பிரதேசங்களிலும் அந்தந்தக் கால கட்டங்களிலே இருப்பதை நாங்கள் கண்டு கொண்டோம்.

விஷேடமாக தமிழ் முஸ்லிம் எல்லைக் கிராமங்கிளிலே இந்தப் பிரச்சினை பூதாகாரமாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதை நாம் ஏன் இன்னும் முடிவுக்குக் கொண்டு வராமல் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றோம்?.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலே பல தடவை என்னுடைய பாராளுமன்ற உரையிலே நான் தெளிவாகக் கூறியிருக்கின்றேன். நாங்கள் சமூக ரீதியான பிரச்சினைகளுக்காகப் பேசவந்த அரசியல் தலைவர்கள்.

எங்களுக்குள்ளே ஒரு உடன்பாடு கண்டு கொள்ளாத நிலையில் அல்லது அந்தப் பிராந்தியத்திலே இருக்கின்ற நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்வுக்குக் கொண்டு வருவதற்கு ஏதாவதொரு முயற்சி எடுக்காத வரையில் நிச்சயமாக இனங்களுக்கிடையிலே ஒற்றுமையைக் கொண்டு வரமுடியாது.

நாங்கள் தெளிவாகக் கூறினோம் அந்த நாட்களிலே அந்தப் பிரதேசங்களிலே இருந்த விடுதலைப் புலிகளினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபொழுது விஷேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அங்கு விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருந்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாது பாதிக்கப்பட்டார்கள்.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் காணிச் சொந்தக் காரர்களான முஸ்லிம்களால் செய்கை பண்ணப்படாமல் விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக செய்கை பண்ணப்பட்டது. அந்தக் காலகட்டத்திலும் கூட இந்தச் சபையிலும் பிரதேச அரசியல் தலைவர்களுக்கும் இது விடயமாக எல்லை ரீதியான ஒரு தீர்க்கமான முடிவினை நாங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால் எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் ஒரு நிம்மதியான சூழ்நிலை இந்த இரு சமூகங்களுக்கு மத்தியிலும் உருவாகாது என்று நான் தெளிவாகவும் அழுத்தமாகவும் கூறியிருக்கின்றேன்.

இவற்றுக்கெல்லாம் அப்பாலும் பிராந்தியத்திலே இருக்கின்ற அரசியல் தலைவர்கள் கடந்த காலத்திலே தவறிழைத்து விட்டார்கள்.

எதிர்காலத்திலும் அவ்வாறு பிழை விடக்கூடாது என்பதுதான் என் பிரார்த்தனை.

மட்டக்களப்பு மாவட்டம் 2600 சதுர மைல்களைக் கொண்டமைந்துள்ளது. ஆனால் அங்கே மூன்றிலொரு பங்கினராக வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் 26 சதுர மைல்களுக்குள் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் எவ்வளவு கஸ்டத்தோடும் பிரச்சினையோடும் வாழ்கிறார்கள் என்பதை இந்த சபை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சம்பந்தன் ஐயா அவர்கள் இந்த விடயத்தையும் அவரது ஒத்தி வைப்புப் பிரேரணையிலே செருகியிருப்பாரென்றால் அந்தப் பிராந்தியத்திலே பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் சந்தோசப்பட்டிருப்பார்கள்.

கிழக்கு மாகாணத்திலே முஸ்லிம் பிரதேசங்களில் வாழ்கின்ற 31 வயதிற்கும் 41 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களுக்கு புற்றுநோய் வியாதி வருவதாக ஒரு புதிய மருத்துவ ஆய்வொன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நெருக்கமான சன அடர்த்தி மிக்கதொரு சூழலுக்குள் வாழ்கின்ற நிகழ்வு. ஒரு வீட்டுரிமையாளரின் கிணறு உள்ள அதேபக்கத்தில் அண்டை வீட்டாரின் மலசல கூடக் குழி இருக்கின்றது.

இந்த அவலத்தை முஸ்லிம் சமூகம் விலை கொடுத்து வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட எல்லை ரீதியான கோடு இன்னும் வெளிப்படையாக வராமல் இருக்கின்ற ஒரு கவலையான விடயம்.

வாகரைப் பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்திலே பிரமாண்டமான நிலப்பரப்பைக் கொண்டது. ஆனால் அங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் விரட்டப்பட்டுள்ளார்கள். இப்பொழுது காணியில்லாமல் அவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு சில அதிகாரிகளின் செயற்பாடுகளாலும் அந்தப் பிராந்தியத்திலே இருக்கின்ற புலிகள் இயக்கத்தினுடைய எச்ச சொச்சங்களின் நடவடிக்கையின் அடிப்படையிலும் இன்னும் முஸ்லிம் பிரதேச நிருவாக உரிமைகள் முஸ்லிம் மக்களுக்குக் கொடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதாக கோறளைப்பற்று மத்தியென்றும் தமிழ் மக்களை உள்ளடக்கியதாக கோறளைப்பற்று தெற்கு கிரான் என்றும் இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகள் 2002.05.24ம் திகதி உருவாக்கப்பட்டன.

அன்றைய பிரதேச செயலகப் பிரிப்போடு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிலிருந்த பெறுமதியான 5 கிராம அலுவலர் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்ட கிரான் பிரதேச செயலகப் பிரிவோடு இணைக்கப்பட்டதன் விளைவாக இப்பொழுது அந்தப் பகுதியிலே வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் ஒரு கிலோமீற்றருக்குள் இருக்கின்ற ஓட்டமாவடி பிரதேச செயலகத்தை விட்டு விட்டு 13 கிலோமீற்றர்களுக்கப்பால் இருக்கின்ற கிரான் பிரதேச செயலகத்திற்குச் சென்று தமது அலுவல்களுக்காக அலைய வேண்டி ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களது வயல் நிலங்கள் இன்னும் அவர்கள் வசம் ஒப்படைக்கப்படாத ஒரு கேவலமான நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

போதியளவு ஆவணங்கள் இருந்தும் வாகரைப் பிரதேசத்திற்குள்ளே பூர்வீகமாக இருக்கின்ற முஸ்லிம் விவசாய சமூகத்தின் காணிகள்இன்னும் அவர்களுக்கு மீளக் கொடுக்கப்படவில்லை.

மதுரங்கேணிக் குளம் பகுதியிலே என்னுடைய தகப்பனின் பேரால் எனக்குச் சொந்தமான காணி உள்ளது.

அங்கு ஒரு முஸ்லிம் பாடசாலை, பள்ளிவாசல் எல்லாம் இருந்தன. ஆனால் அவையெல்லாவற்றையும் அழித்தொழித்து விட்டார்கள்.

முஸ்லிம்களின் பூர்வீக இடங்களிலே தமிழ் மக்களுக்கு இப்பொழுது வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு வாழ்விடம் அமைத்துக் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை.

அரசாங்க நிதியளிப்பின் மூலம் இடம்பெறும் இந்த மீள் குடியேற்ற வேலைத் திட்டங்களில் அங்கு முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதுபற்றி சம்பந்தன் ஐயா அவர்கள் அவரது பிரேரணையில் ஒரு வார்த்தை சேர்த்திருக்க வேண்டும்.

அந்தப் பிரதேசத்திலே 1985ஆம் ஆண்டுக்கு முன்பாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலே இருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் அங்கு மீளத் திரும்புவதற்கு தமிழ் சமூகம் இன்னும் அனுமதிக்கவில்லை.

இது முஸ்லிம் சமூகத்திற்கு இழைக்கப்படுகின்ற மாபெரிய துரோகமும் அநியாயமுமாகும்.

இவ்வாறே தொடர்ந்து பேசிக்கொண்டே செல்லக் கூடிய நிலைமை இருந்தால் நிச்சயமாக அது விடிவைக் காண முடியாத ஆரோக்கியமில்லாத சூழலை ஏற்படுத்தும்.

முஸ்லிம்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படட்டுள்ளன. முஸ்லிம்கள் தம்வசம் வைத்திருந்த ஆவணங்களைக் கூட தமிழ் அதிகாரிகள் கைப்பற்றி அவற்றை அழித்தொழித்து விட்டார்கள்.

இந்த மாவட்டத்திலே ஒரு நல்ல சூழலை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி அம்மா கனகசபை ஐயா எல்லோரும் இருக்கத்தக்கதாக இந்த சபையிலே பல தடவைகள் நான் கூறியிருக்கின்றேன்.

83ஆம் ஆண்டுக்கு முன்பு இரண்டு சமூகங்களும் எவ்வளவு ஐக்கியமாக வாழ்ந்தார்கள். அதே ஐக்கியத்தை நாங்கள் மீண்டும் கொண்டு வரவேண்டுமென்று சொல்கின்றேன்.

அந்தப் பிராந்தியத்திலே இருக்கின்ற இரண்டு சமூகங்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக அரசியல்வாதிகளின் அரசியல் தேவைகளுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கும் அப்பால் நின்று நாங்கள் இதற்கு ஏதேனுமொரு வடிவத்தில் தீர்வு கண்டு கொடுக்க வேண்டும்.

அவ்வாறு நாம் செய்யவில்லையென்றால் இதே பாராளுமன்றத்திலே தொடர்ந்தேர்ச்சையாக சம்பந்தன் ஐயாவும் அமீரலியும் அதன் பின்பாக வரக்கூடிய வேறு தலைவர்களும் இதைப்பற்றிப் பேசிக் கொண்டு செல்வார்களே தவிர பிரச்சினைக்கு ஒருபோதும் முடிவு கிட்டாது.

இந்தப் பிரச்சினைக்கு மிகவும் இலகுவாகத் தீர்வு காணலாம்.

இரண்டு சமூகத்திற்குமிடைப்பட்ட பிரச்சினை இப்பொழுது அங்கு பூதாகாரமாக உருவெடுத்திருக்கிறது.

தமிழர்கள் முஸ்லிம்கள் சிங்களவர் என்றில்லாமல் எல்லோரும் மேம்பாடு அடைய வேண்டும் என்று கனவு காண்பவர்களில் நானும் ஒருவன்.

வாழைச்சேனையிலே சங்கத்துக் கொலனி என்கின்ற ஒரு பிரதேசம் இருக்கின்றது. அங்கு 59 முஸ்லிம் குடும்பங்கள் காலங்காலமாக அவர்களுடைய உறுதிக் காணிளோடு வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால் அந்தப் பிரதேசத்து மக்கள் இப்பொழுது அங்கே செல்ல முடியாதவாறு தமிழ் மக்கள் அவர்களது காணிகளை ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

பிரதேச மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக நான் உங்களிடம் இதை மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பிரதேசத்திலே இருக்கின்ற அரசியல்வாதிகள் அதன் தலைவர்கள் இந்த விடயம்பற்றி எதிர்காலத்திலே நீங்கள் அவசர அவசரமாக ஒரு தீர்வைத் தேடித் தரவேண்டும்.

பாதிக்கப்பட்ட சமூகம் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல் தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள் உரிமை எல்லாம் கிடைக்கப்பெற வேண்டும் என்பதிலும் எங்களுக்கு உடன்பாடு இருக்கின்றது. அதிலே எந்த மாற்றுக் கருத்தும் எங்களிடம் கிடையாது.

இரண்டு சமூகங்களின் குறைபாடுகள் என்ன என்று அவர்கள் வாழும் எல்லைகளுக்குச் சென்று ஆராய்ந்து தீர்வு காணப்பட வேண்டும். அந்த சமூகங்களை ஒற்றுமையாக வைத்திருக்கும் சூழலை உருவாக்க வேண்டும்.

இதை சம்பந்தன் ஐயா அவர்கள் உங்களுடைய தலைமைத்துவத்தின் கீழ் செய்ய முடியுமென்று சொன்னால் இந்த அரசியல் வாழ்வில் அது ஒரு இமாலய சாதனையாக இருக்கும்

வாகரை கிரான் ஆகிய பிரதேசங்களிலே இருக்கின்ற முஸ்லிம் மக்களுடைய காணி, வயல் பிரச்சினை, இதேபோன்று காத்தான்குடி, ஏறாவூர், கல்குடா பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்களுக்குரிய காணிப் பிரச்சினைகள் ஏராளம் இருக்கின்றன.

மட்டக்களப்பில் வாழும் எல்லா முஸ்லிம் பிரதேசங்களிலுமுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் காணிப் பிரச்சினை உள்ளது. அதனை நியாயமாகத் தீர்ப்பதற்கு எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளையும் எடுக்க அரசியல் தலைமைகள் தவறிவிட்டன.

அதன் காரணமாகத்தான் இப்பொழுதும் இனிவரும் காலங்களிலும் நாங்கள் இதைப்பற்றிப் பேச வேண்டிய நிலையுள்ளது.

எப்பொழுது யார் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கின்றபொழுது அங்கே இனத்துவேஷம் பேசப்படுகின்றது.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்திலே பெரும்பான்மை சமூகமாக இருக்கின்ற நீங்கள் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதன் மூலம்தான் சகவாழ்வை உருவாக்க முடியும்.

# மலையக வரலாறும் ஈழத்து இலக்கியமும் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை










(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

*தெல்தோட்டை ஊடகமன்றமும் அருள்வாக்கி அப்துகாதிர் கலை இலக்கிய கழகத்தினதும் ஏற்பாட்டில் மலையக வரலாறும் ஈழத்து இலக்கியமும் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை ஒன்று வியாழனன்று (30) தெமடகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுதீன் தலைமையில் இடம் பெற்றது.*

*இதன்போது மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியும் மலையக அடையாள உருவாக்கமும் எனும் தொணிப் பொருளிலான உரையையும் நினைவுப் பேருரையையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான மயில்வாகனம் திலகராஜா நிகழ்த்தினார். இதன்போது வரவேற்புரையை தெல்தோட்டை ஊடகமன்றத் தலைவர் அஷ்ஷெய்க் சி.எம்.எம். சுபைர் நிகழ்த்தினார், தலைமைய உரையை காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுதீன் நிகழ்த்தினார் பேருரையாளர் அறிமுகத்தை கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்ழாரும் நன்றியுரையை தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர் திருமதி டி.என்.இஸ்ராவும் வழங்கினர்.*


*இந்நிகழ்வில் ஊடக அமைப்பினர் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுதீனுக்கு நினவுச்சின்னம் வழங்கியும் விஷேட பேச்சாளருக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டதுடன் ஊடக மன்றத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்படனர்.*

*இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான ரஊப் ஹக்கீம், அப்துல் ஹலீம், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைஸல் உள்ளிட்ட கலை ஆர்வளர்கள், அரச அதிகாரிகள், ஊடகவியாளர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.*

# பொத்துவிலில் மதுபானசாலை அமைக்க ஹரீஸ் எம்.பி. எதிர்ப்பு

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிங்களை பெரும்பான்மையாக கொண்ட பொத்துவில் 11, வட்டிவெளி பிரதான வீதியில் (பொத்துவில் பொலிஸ் நிலையம் அருகில்) வர்த்தகர் ஒருவரினால் அமைக்கப்படவிருந்த மதுபானசாலையை தடுத்து நிறுத்துமாறு பொத்துவில் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களுக்கு இந்த மதுபானசாலையை நிறுவுவதை தடுக்குமாறு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய கடந்த செப்டம்பர் 19 அன்று நிதி இராஜாங்க



அமைச்சருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மக்களின் எதிர்ப்பையும், குறித்த மதுபானசாலை அமைந்தால் உருவாக உள்ள பிரச்சினைகளையும் தெளிவுபடுத்தியிருந்தார்.

மேலும் நிதி இராஜாங்க அமைச்சர் இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு குறித்த மதுபானசாலைக்கு மக்களின் எதிர்ப்பு உள்ள விடயத்தை சுட்டிக்காட்டி அனுமதி வழங்கும் விடயத்தை மீள் பரிசீலிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களும் இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு முன்வைத்த மதுபானசாலை அனுமதிப்பத்திரம் சம்பந்தமான எதிர்ப்புகளை கவனத்தில் கொண்டு குறித்த மதுபானசாலையின் அனுமதி தற்காலியமாக நிறுத்தப்பட்டு இது தொடர்பிலான விளக்கங்களை (நேரடி வாக்கு மூலம்) வழங்க பொத்துவில் பிரதேச செயலகம் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களை எதிர்வரும் 2023.12.05 ம் திகதி பிரதேச செயலகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

முஸ்லிங்களை அதிகமாக கொண்டுள்ள பொத்துவில் பிரதேசத்தில் கலாச்சாரத்தையும், ஒழுக்கநெறிகளையும் சீரழிக்கும் மதுபானசாலை அமைப்பது கண்டிக்கத்தக்க விடயமாக பொதுமக்களால் நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பாணந்துறை கல்விக் கோட்டம் மட்டத்தில் ஜீலான் முதலிடம்

(யாழ் பரீட் இக்பால்)

இம்முறை க.பொ.த சாதாரண தர பரீட்சையில் பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் (தேசிய பாடசாலை) பாணந்துறை கோட்ட மட்ட பாடசாலைகளில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பதாக பாடசாலை அதிபர் ஏ.எம். ஹலீம் மஜீத் தெரிவித்தார்.

எம்.எப்.ஏ.எப். ஆயிஷா 9 ஏ
ஆர்.டி.எப். றிஹ்மா 9 ஏ
எம்.எச். ஆயிஷா 9 ஏ
எம்.எம்.எப். அஸ்மா 9 ஏ
எம்.என். ஹம்தா 8 ஏ 1 பி
எம்.எப்.எம். இபாத் 8 ஏ 1 பி

சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை அதிபர் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் பழைய மாணவர் சங்கத்தினர் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

## கற்பிட்டி திகழி முஸ்லிம் பாடசாலை 71 சதவீத சித்தி

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி திகழி முஸ்லிம் மகா வித்தியாலயம் இம்முறை இடம்பெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளது.

கலில் ரஹ்மான் பாத்திமா றிஸ்கா என்ற மாணவி 9 யு பெற்றுள்ளார். அத்தோடு மொஹமட் அப்துல் றஸ்ஸாக் ஹிரா , மொஹமட் பலீல் பாத்திமா றப்தா, மொஹமட் ஹம்தான் பாத்திமா இர்பா ஆகிய மூன்று மாணவிகளும் 8A.1 B பெற்றுள்ளதுடன் மொஹமட் றஸ்மிகான் அஸ்மா 6 A ,3 B யையும் மொஹமட் அர்ஷத் பாத்திமா றிலா 5 A , 4 B யையும் பெற்றுள்ளார்கள்.

பாடசாலையில் இருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களில் 71 சதவீதமானவர்கள் உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளதாக அதிபர் எம்.ஐ.எம். றஸ்ஸாக் தெரிவித்தார்.

## பிரடி கமகே கிழக்கு திமோரில் கௌரவிப்பு



(இஸ்மதுல் றஹ்மான்)

கிழக்கு திமோர் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து செயல்பட்ட வெப் ஊடகவியளாலரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான பிரடி கமகே அந் நாட்டு ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பட்டார்.

நீர்கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கு மீபுர வெப்தள முன்னோடியும், வெப் ஊடகவியளாலர் சங்க ஏற்பாட்டாளருமான பிரடி கமகே 27 ம் திகதி கிழக்கு திமோரில் நாட்டில் ஜனாதிபதி ராமோஸ் ஹொர்டா அவர்களினால் பதக்கம் அணிவித்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

## "தமிழர்கள், முஸ்லிம்கள் என்பதானா கிழக்கு மாகாண சதொசா ஊழியர்கள் பழிவாங்கப்படுகின்றனர்?"

### - மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் சபையில் கேள்வி!



கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் பணிபுரிந்த பெரும்பாலான சதொச கிளைகள் மூடப்பட்டு, அங்கிருந்த ஊழியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டமையால், பிரதேச மக்களும் சதொச பணியாளர்களும் மிகவும் கஷ்டப்படுவதாகவும், இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வர்த்தக அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

வெள்ளியன்று (01) பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"நான் கைத்தொழில் வர்த்தக அமைச்சைப் பொறுபேற்ற போது 275 சதொச கிளைகளே இயங்கின. எனது பதவிக்காலத்தில் அவற்றை 400 ஆக அதிகரித்து, இந்த நிறுவனத்தை இலாபகரமானதாக ஆக்கினேன். கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் இயங்கிய சதொச கிளைகள் திட்டமிட்டு மூடப்பட்டன. அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். 35,000ரூபா சம்பளத்தில் இவர்கள் வெளிமாவட்டங்களில் எவ்வாறு பணிபுரிய முடியும்? தமிழ், முஸ்லிம் என்பதனாலா இவர்கள் இவ்வாறு பழிவாங்கப்படுகின்றனர்? எனவே, மூடப்பட்டுள்ள சதொச கிளைகளை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த வர்த்தக வாணிப அமைச்சர் ரமேஷ் பத்திரன, "நீங்கள் சொல்வது முற்றிலும் சாதாரணமானதும் நியாயமானதும் கூட. இருப்பினும், நிறுவனத்தின் இலாபத்தையும் கருத்திற்கொண்டு, அவற்றை மீளத் திறக்க நாம் நடவடிக்கை எடுப்போம்" என்று தெரிவித்தார்.

## ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ள உபகரணப் பொதி

இலங்கை பத்திரிகையாளர் பேரவையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியினை வழங்க இலங்கை பத்திரிகையாளர் பேரவை தீர்மானித்துள்ளதாக பேரவையின் உதவி ஆணையாளர் தில்ஹானி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2023 டிசம்பர் மாதம் 09 ம் திகதி பிற்பகல் 02 மணிக்கு ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை இல 58 ல் அமைந்துள்ள வங்கி கற்கைகளுக்கான நிலையத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு இப்பொதிகளை வழங்கி வைக்க உள்ளதாக ஆவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பொதியினை பெற்றுக் கொள்ள வரும் ஊடகவியலாளர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஊடக அடையாளம் அட்டை அல்லது ஊடக நிறுவனத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் இப்பொதியை பெற்றுக் கொள்வதற்கான இலங்கை பத்திரிகையாளர் பேரவையினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தையும் கொண்டுவர வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்குரிய பொதிகளை அவர்களே முன்வந்து பெற்றுக் கோள்ள வேண்டும் என்றும் 2023 டிசம்பர் 06 ம் திகதிக்கு முன்னர் தாங்களின் வரவினை 0112 693271 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மனநலமும் ஆலோசனையும் 08

# புரிதல்

புரிதல் என்பது ஆழமான ஒரு பொருளை உள்ளடக்கியது.

புரிதல் என்ற சொல்லை கவணமாக ஆராய்ந்து பார்த்தால் அங்கே ஒரு மறைந்த அர்த்தம் இருப்பதை காணலாம்.

இரண்டு நபர்களுக்கு இடையில் இருக்கின்ற ஒரு கணதியான பிணைப்புதான் அந்த மறைந்த அர்த்தம். இதை உள்ளங்களுக்கு இடையில் உள்ள உறுதியான பிணைப்பு என்றும் சொல்லலாம்.

புரிதல் எனும் இந்த உள்ளங்களுக்கு இடையிலான பிணைப்பு மதிப்பையும் கௌரவத்தையும் அடிப்படையாக கொண்டது. அத்துடன் நம்பிக்கையால் பிணைக்கப்பட்டது.

நமது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருப்பது புரிதல். நாம் மற்றவர்களை புரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம். அதேவேளை நாம் மற்றவர்களால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதை ஆசையோடும் ஆர்வத்தோடும் எதிர்பார்க்கிறோம்.

மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் அவர்களின் வார்த்தைகளுக்குப் பின்னால், அவர்களது உணர்வுகளுக்குப் பின்னால், அவர்களது உடல் மொழிகளுக்குப் பின்னால் உள்ள அர்த்தங்கள் என்ன என்பதை புரிந்துகொள்ளும் திறன் நம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். இந்த திறன் மற்றவரை சரியாக புரிவதற்க்கான அத்திவாரமாக இருக்கிறது. இந்த திறன் இல்லாவிட்டால் நாம் முக்கியமான தகவல்களை அல்லது குறிப்புகளை பெருவதில் தவறவிடலாம்.

புரிதல் நடைபெறாத போது அல்லது பிழையான புரிதலின் போது அக்கணமே உறவில் ஊக்கம் குறைந்து போகலாம்.

சரியான நேரத்தில் சராசரியாக மாற்றங்களைக் காண முடியாத நிலையையும் ஏற்படுத்தி விடலாம்.

இதில் உள்ள மிக மோசமான விடயம் என்னவென்றால் நம்மிடம் புரியும் திறன் இல்லாவிட்டால், மற்றவர்களுக்கு உதவுவதற்கான ஆயத்தமோ அல்லது அதற்கான தகுதியோ எம்மிடம் இல்லை என்பதேயாகும்.

அதேபோல், மற்றவர்கள் நம்மைப் புரிந்துகொள்ளாவிட்டால் அல்லது நாம் புரியப் படவில்லை என்பதை உணர்ந்து கொண்டால் நாம் குழப்பமடைந்து, விரக்தியடைந்து போவோம். கவனிக்கப்படவில்லை என்று நினைத்து கோபப்படுவோம்.

தவறாக புரிந்து கொள்ளப்பட்டதான எண்ணம் ஏற்பட்டு ஏமாற்றத்தை உணர்வோம்.

நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுகிறோம் என்று நினைப்போம்.

சோகத்தையும் மனச்சோர்வையும் உணர்வோம்.

எனவே புரிதல் என்பது அனைவருக்கும் இருக்க வேண்டிய மிக அவசியமான திறமை என்பதை இதிலிருந்து அறியலாம்.

புரிதல் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டியது, எல்லா நிலைகளுக்கும் தேவையானது என்பதை நாம் எவரும் மறுக்க மாட்டோம். மற்றவர்களுடனான உறவின் வெற்றியை தீர்மானிக்கும் அளவுகோலாக இருப்பது புரிதல் ஆகும்.

புரிதல் இல்லாமல் ஏமாற்றப்பட்டவர்கள் ஏராளம்.

புரிதல் இல்லாமல் வாழ்க்கையை தொலைத்தவர்கள் தாராளம்.

"நான் உன்னைப் புரிந்துகொள்கிறேன்" என்று சொல்லிச் சொல்லியே புரிந்து கொண்டதாக நடிப்பவர்கள் பலர். "நான் உன்னைப் புரிந்துகொள்கிறேன்" என்று கூறும்போது, அது உண்மையில் புரிந்து கொண்டதன் உணர்வில் கூறுவதா? அல்லது நாம் சாதாரணமாக பயன்படுத்தும் சொற்றொடராக வெளிவருவதா?

"நான் உன்னைப் புரிந்துகொள்கிறேன்" என்று வெறும் உதடுகளின் உச்சரிப்பாக சொல்பவர்கள் இல்லாமல் இல்லை. மற்றொருவரின் உண்மை நிலைமையை நாங்கள் புரிந்துகொண்ட பிறகுதான் "உன்னைப் புரிந்துகொள்கிறேன்" என்று சொல்கிறோமா?

புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்ற ஆசை மனித இதயத்தின் மிகப்பெரிய ஆசை என்று தியோடர் ரூஸ்வெல்ட் கூறுகிறார். புரிந்து கொள்ளப்படுதல் என்பது "உங்களை புரிந்து கொண்டேன்" என்று வெறுமனே மற்றவருக்கு தெரிவிப்பதல்ல. அல்லது புரிந்துகொண்டதாக நாம் நினைத்துக் கொள்வதும் அல்ல. "நீங்கள் என்னைப் புரிந்து கொள்ள முடிந்தால், அதை வெறும் வார்த்தைகளால் சொல்ல மாட்டீர்கள். நீங்கள் என்னைப் புரிந்து கொண்டால் "புரிந்து கொண்டேன்" என்பதை எனக்கு உணரவைப்பீர்கள். அதன் விளைவாக என் உணர்வுகள் ஆனந்தமும் அமைதியும் அடையும். என்று மக்கள் மனமார சொல்வதை எங்கள் உள்ளம் ஊக்கமாய் கேட்கும்.

மற்றவர்களைப் சரியாக புரிந்துகொள்ளாதவரை அவர்களுக்கு என்ன செய்வது, எப்படி உதவுவது என்று எங்களுக்குத் தெரியாமல் போய்விடும். நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள்.

எனவே புரிதலும் தனித்துவமானது. ஒவ்வொருவரும் அவரவர் தேவைக்கு ஏற்றவாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமனது.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# அறிவியலில் மற்றும் மனிதநேய முன்னேற்றங்கள் பற்றிய மாநாடு






அறிவியலில் மற்றும் மனிதநேய முன்னேற்றங்கள் பற்றிய SLIIT சர்வதேச மாநாடு மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வியாளர் விருதுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் கௌரவ காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி அவர்கள் கலந்துகொண்டார். இந்நிகழ்வின் போது அக்கல்வி நிலையத்தின் முக்கியமான பல ஊழியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அந்நிகழ்வின் போது, கௌரவ தூதுவர் ஒரு உரையை நிகழ்த்தியதுடன், அந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொள்ள தன்னை அழைத்தமைக்காக அந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கு நன்றியும் தெரிவித்தார்.

"இன்று, பல வருட உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் கற்றலின் பலனைக் கொண்டாட நாம் ஒன்றுகூடும் சிறப்பான நாளாகும். மாணவர்களிலும் சமூகத்தின் மத்தியிலும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த வலுவான அர்ப்பணிப்போடு செயற்படும் விதிவிலக்கான கல்வி வழங்குனர்களை அங்கீகரிக்கவும் பாராட்டவும் இந்த தருணத்தை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். இந்த முக்கியமான நாளில், 2023 தேசிய கல்வியாளர் விருதுகளைப் பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களுக்கு வெற்றியும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்காலத்தைப் பெறவும் வாழ்த்துகிறேன்" என கௌரவ தூதுவர் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

மேலும், விருதை வென்றவர்களை, குறிப்பிட்ட துறைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இருக்காமல் ஏனைய துறைகளுக்கான ஊக்குவிப்பாளர்களாக இருக்கவும் அவற்றுக்கிடையிலான இடைவெளிகளை இணைப்பதற்காகவும், ஒத்துழைப்பை வளர்க்கவும், ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் சமூக சவால்களை எதிர்கொள்ளவும் தங்கள் திறமைகளைப் பயன்படுத்தவும் அவர் ஊக்குவித்தார்.

மேலும் பல்வேறு நிபுணத்துவங்கள் ஊடாக தரமான கல்வி மற்றும் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாடு ஆகியவற்றில் பங்கேற்பதை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையின் கல்வித் துறையை முன்னேற்றுவதில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் வகிபாகத்தையும் கௌரவ தூதுவர் அவர்கள் பாராட்டினார்.

அத்துடன், இலங்கைக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்பையும் குறிப்பாக இரு நட்பு நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையில் உள்ள ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். மேலும் கல்வி சார் நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் இரு நட்பு நாடுகளுக்கும் இடையிலான உறவும் அதேபோல பல்வேறு துறைகளில் உள்ள மக்களுக்கும் இடையேயான உறவுகளும் மேம்படும் எனவும் அவர் வலியுருத்தினார்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் இலங்கை மாணவர்களுக்கு அல்லாமா இக்பால் புலமை பரிசில் வழங்கி வைப்பு







(அஷ்ரப் ஏ சமட்)

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம், பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் தகுதியான இலங்கை மாணவர்களுக்கான அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் விருது வழங்கல் 2023 நிகழ்வினை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இப்புலமைப்பரிசிலானது பாகிஸ்தானின் தலைசிறந்த கவிஞரும் தத்துவயானியுமாக திகழ்ந்த அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களின் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இப்புலமைப்பரிசில் திட்டமானது 2019 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் இப்புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கை முழுவதும் உள்ள தகுதியான 321 மாணவர்களுக்கு பாகிஸ்தானில் உயர்கல்வியினை தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன், இலங்கையின் திறமையான 357 மாணவர்கள் ஏற்கனவே இப்புலமை பரிசிலின் ஊடாக இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி மட்டத்தில் தமது உயர் கல்வியினை பாகிஸ்தானில் பயின்று வருகின்றனர். மேலும், அடுத்த ஆண்டுக்கான இப்புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் 2024ம் ஆண்டு பெப்ரவரியில் கோரப்படும்.

பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் ஃபாரூக் பர்கி இந்நிகழ்வில் உரையாற்றும் போது, பாகிஸ்தான்-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையே நீண்டகால உறவு காணப்படுவதாகவும், பாகிஸ்தானில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் பாகிஸ்தானியர்களின் விசேட விருந்தினர்கள் என்றும், இம்மாணவர்கள் சிறப்பான முறையில் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார். இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து இனத்தவர்களும் பாலினம் மற்றும் சமய வேறுபாடின்றி நியாயமான முறையில் இப்புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவர்களும் பாகிஸ்தானில் தங்கள் உயர்கல்வியினை வெற்றிகரமாக முடித்து இலங்கைக்கு திரும்பியதும், அவர்கள் ஒவ்வொருவரையும் பாகிஸ்தானின் தூதுவர்களாக பாகிஸ்தான் கருதுகிறது என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

# தங்கப் பதக்கம் வென்ற நிப்ராஸுக்கு கௌரவிப்பு



(மூதூர் எஸ்.ஏ.பறூஸ்)

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 34 வது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் 800 மீற்றர் ஓட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் 1500 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்ற மூதூர் ஆலிம் நகர் ஆர்.எம்.நிப்ராஸ் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாரக் அவர்களால் அண்மையில் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டார். இவர் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.



அப்ரித் வஸீர்




# அமெரிக்க மண்ணில் ரீ20 உலக கிண்ணம்

2024 டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் எப்போது நடைபெறும் என்பதற்கான திகதியை தற்போது ஐசிசி வெளியிட்டுள்ளது.

உலகக் கோப்பை தொடர் முடிந்து அடுத்த ஆறு மாதத்திற்குள் ஐசிசி டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெறும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக ஐசிசி ஆலோசனை நடத்தியுள்ளது.

இதில் 2024 டி20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியை ஜூன் நான்காம் திகதி முதல் 30-ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் 10 மைதானங்கள் தேர்வு செய்யப்பட உள்ளன. இதில் அமெரிக்காவில் ஃப்ளோரிடா, டல்லாஸ்,நியூயார்க் ,மோர்ச்வெயில் ஆகிய நகரங்களில் நடைபெற உள்ளது. இந்தத் தொடரில் முன் எப்போதும் இல்லாத வகையில் 20 அணிகள் விளையாட உள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து அணிகள் என மொத்தம் நான்கு பிரிவுகள் லீக் சுற்றில் பிரிக்கப்பட உள்ளது. இதில் முதல் இரண்டு இடங்கள் பிடிக்கும் அணி சூப்பர் 8 சுற்றுக்கு செல்லும். சூப்பர் 8 சுற்றில் இரு பிரிவுகளாக நான்கு அணிகள் களமிறங்கும்.அதில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணி அரையிறுதி சுற்றுக்கு செல்லும்.

டி20 உலக கோப்பையில் அதிக அணிகளை சேர்க்க வேண்டும் என்பதற்காக இந்த நல்ல முடிவை ஐசிசி எடுத்துள்ளது. மேலும் இந்த தொடர் மூலம் அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்த முயற்சிகள் நடைபெறுகிறது.

இதேபோன்று 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற இருக்கிறது. இந்த ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் சேர்க்க ஐசிசி தீவிரமாக முயற்சித்து வருகிறது. இதற்கு முன்னேற்பாடு செய்யும் வகையில் தான் ஐசிசி அமெரிக்காவில் போட்டியை நடத்துகிறது. இந்த நிலையில் ஐபிஎல் தொடர் மே மாதம் இறுதி வரை நடைபெறும். அது முடிந்தவுடன் எந்த ஒய்வும் இன்றி வீரர்கள் தற்போது டி20 உலக கோப்பை தொடரில் விளையாடும் சூழல் ஏற்பட்டு இருக்கிறது.

யாரும் எதிர்பார்க்காத திருப்பமாக 2024 டி20 உலகக்கோப்பை தொடருக்கு உகாண்டா அணி தகுதி பெற்றுள்ளது. உகாண்டா அணி முதல்முறையாக ஒரு உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்க உள்ளது. இது கிரிக்கெட் உலகில் வரலாற்று சிறப்புமிக்க சம்பவமாக பார்க்கப்படுகிறது.

ஒரு காலத்தில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற அணிகளுக்கு சவாலான அணியாக விளங்கிய ஜிம்பாப்வே, இந்த தகுதி சுற்றில் உகாண்டா உள்ளிட்ட பிற கத்துக்குட்டி அணிகளிடம் தோல்வி அடைந்து டி20 உலகக்கோப்பைக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

2024 டி20 உலகக்கோப்பை தொடருக்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து இரண்டு அணிகளை பங்கேற்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் ஏழு ஆப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான ஆப்பிரிக்க பிராந்திய டி20 உலகக்கோப்பை தகுதிச் சுற்று தொடர் நடைபெற்றது.

அதில் உகாண்டா அணி தான் ஆடிய 6 போட்டிகளில் ஐந்தில் வெற்றி பெற்று அந்த தொடரின் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடம் பெற்று டி20 உலகக்கோப்பைக்கு 20வது அணியாக தகுதி பெற்றுள்ளது. மற்றொரு அணியாக நமீபியா தகுதி பெற்றுள்ளது. நமீபியா அணி ஏற்கனவே ஒருநாள் போட்டி உலகக்கோப்பை, டி20 உலகக்கோப்பை போன்றவற்றில் பங்கேற்று இருக்கிறது.

ஆனால், உகாண்டா முதல்முறையாக உலகக்கோப்பை தொடரில் பங்கேற்க உள்ளது. அந்த அணியில் ரோனக் பட்டேல், அல்பேஷ் ரம்ஜானி, தினேஷ் நக்ரானி போன்ற சில இந்திய வம்சாவளி வீரர்களும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையேயான 2024 டி20 உலகக்கோப்பை தகுதிச் சுற்றுப் தொடரில் நமீபியா, உகாண்டா, ஜிம்பாப்வே, கென்யா, ருவாண்டா, நைஜீரியா, டான்ஜானியா ஆகிய ஏழு நாடுகள் பங்கேற்றன. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற ஆறு அணிகளுடன் மோத வேண்டும். முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களை பெறும் அணிகள் டி20 உலகக்கோப்பைக்கு தகுதி பெறும். இதில் நமீபியா இதுவரை தான் ஆடிய ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்று தனது உலகக்கோப்பை வாய்ப்பை உறுதி செய்துள்ளது, உகாண்டா தான் ஆடிய ஆறு போட்டிகளில் ஐந்தில் வெற்றி பெற்று தனது இடத்தை உறுதி செய்துள்ளது. நமீபியா அணியிடம் மட்டுமே உகாண்டா தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.

யாரும் எதிர்பார்க்காத திருப்பமாக 2024 டி20 உலகக்கோப்பை தொடருக்கு உகாண்டா அணி தகுதி பெற்றுள்ளது. உகாண்டா அணி முதல்முறையாக ஒரு உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்க உள்ளது. இது கிரிக்கெட் உலகில் வரலாற்று சிறப்புமிக்க சம்பவமாக பார்க்கப்படுகிறது.

ஒரு காலத்தில் இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற அணிகளுக்கு சவாலான அணியாக விளங்கிய ஜிம்பாப்வே, இந்த தகுதி சுற்றில் உகாண்டா உள்ளிட்ட பிற கத்துக்குட்டி அணிகளிடம் தோல்வி அடைந்து டி20 உலகக்கோப்பைக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

2024 டி20 உலகக்கோப்பை தொடருக்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து இரண்டு அணிகளை பங்கேற்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் ஏழு ஆப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான ஆப்பிரிக்க பிராந்திய டி20 உலகக்கோப்பை தகுதிச் சுற்று தொடர் நடைபெற்றது.

அதில் உகாண்டா அணி தான் ஆடிய 6 போட்டிகளில் ஐந்தில் வெற்றி பெற்று அந்த தொடரின் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடம் பெற்று டி20 உலகக்கோப்பைக்கு 20வது அணியாக தகுதி பெற்றுள்ளது. மற்றொரு அணியாக நமீபியா தகுதி பெற்றுள்ளது. நமீபியா அணி ஏற்கனவே ஒருநாள் போட்டி உலகக்கோப்பை, டி20 உலகக்கோப்பை போன்றவற்றில் பங்கேற்று இருக்கிறது.

ஆனால், உகாண்டா முதல்முறையாக உலகக்கோப்பை தொடரில் பங்கேற்க உள்ளது. அந்த அணியில் ரோனக் பட்டேல், அல்பேஷ் ரம்ஜானி, தினேஷ் நக்ரானி போன்ற சில இந்திய வம்சாவளி வீரர்களும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையேயான 2024 டி20 உலகக்கோப்பை தகுதிச் சுற்றுப் தொடரில் நமீபியா, உகாண்டா, ஜிம்பாப்வே, கென்யா, ருவாண்டா, நைஜீரியா, டான்ஜானியா ஆகிய ஏழு நாடுகள் பங்கேற்றன. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற ஆறு அணிகளுடன் மோத வேண்டும். முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களை பெறும் அணிகள் டி20 உலகக்கோப்பைக்கு தகுதி பெறும். இதில் நமீபியா இதுவரை தான் ஆடிய ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்று தனது உலகக்கோப்பை வாய்ப்பை உறுதி செய்துள்ளது, உகாண்டா தான் ஆடிய ஆறு போட்டிகளில் ஐந்தில் வெற்றி பெற்று தனது இடத்தை உறுதி செய்துள்ளது. நமீபியா அணியிடம் மட்டுமே உகாண்டா தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இத்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம்








இலங்கை இத்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம் அதன் தலைவர் டாக்டர் பஹ்மி இஸ்மாயில் தலைமையில் நேற்று முன்தினம் (1) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப ஓச்சிட் மண்டபத்தில் நடைபெற்றது.

பலஸ்தீன் நாட்டின் காஸா பகுதியின் இடம்பெறும் யுத்தம், அங்கு என்ன நடைபெறுகிறது அடுத்து என்ன என்ற தலைப்பில் பலஸ்தீன தூதுவர் கலாநிதி ஸுஹைர் முஹம்மத் ஹம்தல்லா ஸைத் அவர்களுடனான விசேட கலந்துரையாடலும் இதன் போது இடம்பெற்றது.

நிகழ்வில் கலாநிதி எம்.ரசீத் பாபு விசேட பேச்சாளராக கலந்து கொண்டதோடு சங்கத்தின் உப தலைவர் நுஸ்லி ஹுஸைன் கலந்துரையாடலை நடாத்தி வைத்தார்.

நிகழ்வில் பங்கு பற்றிய பலர் பலஸ்தீன் காஸா பகுதியில் நடக்கும் இஸ்ரேலின் அராஜக செயல்கள் பற்றி கேள்வி கேட்டதோடு அதற்கு பலஸ்தீன தூதுவர் பதிலளித்தார்.

இஸ்ரேலின் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலினால் தினமும் அப்பாவி குழந்தைகள், பெண்கள் ஆயிரக்கனக்கான பலஸ்தீனர்கள் மடிந்து வருவதாக தூதுவர் குறிப்பிட்டார்.

சுதந்திர பலஸ்தீனம் தொடர்பிலும் பலஸ்தீன ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் இலங்கை வாழ் மக்கள் அன்று முதல் இன்று வரை காட்டி வரும் ஆதரவை தூதுவர் கலாநீதி ஸுஹைர் முஹம்மத் ஹம்தல்லாஹ் ஸைட் நன்றியோடு இங்கு ஞாபகமூட்டினர்.

இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் அநியாயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்த அறிக்கையும் இதன் போது தூதுவரிடம் கையளிக்கபட்டமை குறிப்பிடத்தக்கது. அத்தீர்மானத்தில் இஸ்ரேலியர்களால் காஸா பகுதியில் மேற்கொள்ளப்படும் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலினால் ஆயிரக்கனக்கான குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் மற்றும் சிவிலியன்கள் கொள்ளப்படுவதையிட்டு இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் வன்மையாக கண்டிக்கிறது. அதே போல் இஸ்ரேலின் கண்மூடித்தனமான வான் தாக்குதலினால் பலஸ்தீன காஸாப் பகுதி மக்களின் வீடுகள் மற்றும் மதஸ்தளங்கள், ஆஸ்பத்திரிகள் மற்றும் அகதி முகாம்கள் சுக்குநூராக்கப்பட்டதையும் வண்மையாக எமது அமைப்பு கண்டிக்கிறது. அத்தோடு இந்த அராஜக செயலினால் பலஸ்தீனத்தில் ஷஹீதாக்கப்பட்டவர்கள் மற்றும் காயமுற்றவர்களுக்காக பிராத்தனை செய்கிறோம். பலஸ்தீனத்தில்

அமைதி சமாதானம் நிலவ பிராத்திக்கினறோம் என இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிகழ்வில் அமைப்பின் பொதுச் செயலாளர் பசீர் மாக்கான் உட்பட உறுப்பினர்கள் அஸ் ஸெய்யித் நகீப் மௌலானா உட்பட நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த உலமாக்கல்,புத்தி ஜீவிகள் மற்றும் முஸ்லிம் மாதக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.